# செம்பதாகை

மலர்: 7
இதழ்: 3
பங்குனி 1985
விலை ரூபா 2-00
புரட்சிகர வெகுஜன ஏடு


★ வன்னிப்பகுதியில் 2 லட்சம் பேர் குடியேற்றப்படுவர்

★ குடியேறும் சிங்களவருக்கு ஆயுதப்பயிற்சி

★ திருகோணமலை மாவட்டம் துண்டாடப்படும்

# மதிகெட்ட யூ.என்.பி ஆட்சியே சதி ஆலோசனைகளை நிறுத்து!!

இன்று மோசமடைந்துள்ள இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வேண்டும் என்ற கோரிக்கை நாட்டு மக்களிடையே வலுவடைந்து வருகின்றது. அத்தகைய அரசியல் தீர்வை சிக்கலாக்கும் விதத்திலும், இனங்களுக்கிடையிலான உறவில் மேலும் பகைமையை வளர்க்கும் வகையிலும் சில திட்டங்களை அரசின் தலைவர்கள் ஆலோசனைக்கு எடுத்துள்ளனர். தமிழ் மக்களை இனரீதியில் மிக ஆழமாகப் பாதிக்கக்கூடிய சதி அம்சங்களைக் கொண்ட இவ் ஆலோசனைத்திட்டங்களை அரசும் அதன் தலைவர்களும் உடன் கைவிடவேண்டும்.

அரசின் தலைவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள சில ஆலோசனைத் திட்டங்கள் இனப் பிரச்சினையோடும், தமிழ் மக்களின் எதிர்காலத்தோடும் சம்மந்தமுடையவையாகும். இவ் ஆலோசனைகள் தமிழ் மக்களை ஒரு இனம் என்ற நிலையில் இருந்து சிதைத்து விடவும், அவர்களது பாரம்பரிய பிரதேசம் என்ற தன்மையை அழித்து விடவும் வல்லவையாகும்.

படும் வவுனியாவில் இருந்து ஆனையிறவு வரையான பிரதேசத்தில் இரண்டு லட்சம் சிங்கள மக்களை திட்டமிட்ட அடிப்படையில் குடியேற்றுவதாகும். இவ்வாறு குடியேற்றப்படும் சிங்களவர்களுக்கு ஆயுதப்பயிற்சியும், இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்படும். தென் இலங்கையின் ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் 250 குடும்பங்கள் வரை இக் குடியேற்றத்

களுக்கு அரசாங்கம் போதிய நிதி உதவியும் தக்க பாதுகாப்பு வசதிகளும் செய்ய இருப்பதாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. இக் குடியேற்றத்தை நடத்தியே தீருவேன் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் தான் கலந்து கொள்ளும் ஒவ்வொரு கூட்டத்திலும் சபதம் எடுத்து வருகிறார். யூ. என். பி அரசுக்கும் அதன் தலைவர்களுக்கும் இவ்வாறான திட்டமிட்ட குடியேற்ற விடயம் புதியதொன்றல்ல. ஏற்கனவே வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் சாத்தியமாகியுள்ளன. அதன் மூலம் தமிழ முஸ்லீம் மக்களின் பலம் குறைக்கப்பட்டதுடன் இனப் பகையை வளர்த்து பேரினவாத ஆளும் சக்திகள் ஆதாயமும் பெற்று வருகின்றனர். இந் நிலையை

சத்தில் இரண்டு லட்சம் சிங்களவர்களைக் குடியேற்றும் முயற்சி மேற்கொள்ளப் படுகின்றது.

இவ்வாறு குடியேற்றப் படுபவர்களுக்கு ஆயுதங்களும் ஆயுதப் பயிற்சியும் வழங்கும் திட்டமானது மிகவும் அபாயகரமானதாகும். இவ்வாறான ஒரு நடைமுறை ஏற்கனவே இஸ்ரேலியர்களால் கையாளப்பட்டது. அதனாலேயே பாலஸ்தீன மக்களில் ஒரு பகுதியினர் கொன்று ஒழிக்கப்படவும் மறு பகுதியினர் தமது தாயகத்தை விட்டு அகதிகளாகத் துரத்தப்படவும் கூடிய நிலை உருவாகியது. இன்றும் பாலஸ்தீன மக்கள் தமது இழந்த தாயகத்தை பெற முடியாத நிலையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அன்று அங்கு செய்ததை இன்று நம் நாட்டில் நடைமுறைப்படுத்த இஸ்ரேலியர்கள் கொடுத்த

வோம் என்று கொக்கரிக்கிறார்கள். இது சாத்தியமற்ற ஒன்று என்று கருதப்பட்டாலும் இவ் அழிவுப் பாதையில் நடப்பதை இந்தப் பேரினவாத ஆட்சியின் தலைவர்கள் பரீட்சிக்கவே விரும்புவர்.

இரண்டாவது திருகோணமலை மாவட்டத்தை துண்டாடி அதன் தற்போதைய பகுதிகளை புதிய மாவட்டங்களுடன் இணைப்பதாகும். அதாவது திருகோணமலைத் துறைமுகத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் தனி மாவட்டமாக்குவது. எஞ்சியுள்ள பகுதிகளை கந்தளாய், கொரவப்பத்தானை ஆகிய புதிய மாவட்டங்களை உருவாக்கி அவற்றுடன் இணைப்பது. இதில் மூதூர், கிண்ணியாவை கந்தளாய் மாவட்டத்துடனும், நாயாறு, கொக்கிளாயை கொரவப்பத்தானை மாவட்

அரசின் தலைவர்களால் முன்வைக்கப்பட்டுள்ள சில ஆலோசனைத் திட்டங்கள் இனப் பிரச்சினையோடும், தமிழ் மக்களின் எதிர்காலத்தோடும் சம்மந்தமுடையவையாகும். இவ் ஆலோசனைகள் தமிழ் மக்களை ஒரு இனம் என்ற நிலையில் இருந்து சிதைத்து விடவும், அவர்களது பாரம்பரிய பிரதேசம் என்ற தன்மையை அழித்து விடவும் வல்லவையாகும்.

ஒன்று, வடமாகாணத்தின் வன்னிப்பிரதேசம் எனப்படும் வவுனியாவில் இருந்து ஆனையிறவு வரையான பிரதேசத்தில் இரண்டு லட்சம் சிங்கள மக்களை திட்டமிட்ட அடிப்படையில் குடியேற்றுவதாகும். இவ்வாறு குடியேற்றப்படும் சிங்களவர்களுக்கு ஆயுதப்பயிற்சியும், இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்படும். தென் இலங்கையின் ஒவ்வொரு தொகுதியில் இருந்தும் 250 குடும்பங்கள் வரை இக் குடியேற்றத்திற்கு தெரிவுசெய்யப்படுவர். இவ்வாறு குடியேற வருபவர்

இவ்வாறான திட்டமிட்ட குடியேற்ற விடயம் புதியதொன்றல்ல. ஏற்கனவே வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மவட்டங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் சாத்தியமாகியுள்ளன. அதன் மூலம் தமிழ முஸ்லீம் மக்களின் பலம் குறைக்கப்பட்டதுடன் இனப் பகையை வளர்த்து பேரினவாத ஆளும் சக்திகள் ஆதாயமும் பெற்று வருகின்றனர். இந் நிலையை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடனேயே வன்னிப் பிரதே

பாலஸ்தீன மக்களில் ஒரு பகுயினர் கொன்று ஒழிக்கப்படவும் மறு பகுதியினர் தமது தாயகத்தை விட்டு அகதிகளாகத் துரத்தப்படவும் கூடிய நிலை உருவாகியது. இன்றும் பாலஸ்தீன மக்கள் தமது இழந்த தாயகத்தை பெற முடியாத நிலையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அன்று அங்கு செய்ததை இன்று நம் நாட்டில் நடைமுறைப்படுத்த இஸ்ரேலியர்கள் கொடுத்த ஆலோசனையை விழுங்கிக் கொண்ட இந்த அரசின் தலைவர்கள் குடியேற்றியே தீரு

மாவட்டங்களுடன் இணைப்பதாகும். அதாவது திருகோணமலைத் துறைமுகத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் தனி மாவட்டமாக்குவது. எஞ்சியுள்ள பகுதிகளை கந்தளாய், கொரவப்பத்தான ஆகிய புதிய மாவட்டங்களை உருவாக்கி அவற்றுடன் இணைப்பது. இதில் மூதூர், கிண்ணியாவை கந்தளாய் மாவட்டத்துடனும், நாயாறு, கொக்கிளாயை கொரவப்பத்தான மாவட்டத்துடனும் இணைப்பதாகும் அதேவேளை தற்போது வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குள் இருக்கும் கென்பாம், டொலர்பாம் ஆகியவற்றை மதவாச்சியுடன் இணைக்கவும் ஆலோசிக்கப்படுகிறது. இவை மட்டுமல்ல மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் அடங்கும் கல்குடா தொகுதியை பொலநறுவை மாவட்டத்துடன் இணைப்ப

(6-ம் பக்கம் பார்க்க)

# சம்பள உயர்வு சட்ட விரோதமாம்!

# தொ.ச. நடவடிக்கை தேசவிரோதமாம்!

இந்த அரசாங்கத்தின் கீழ் சம்பள உயர்வு கேட்பது சட்டவிரோதமானது. அதற்காக யாராவது தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவது தேசவிரோதமானது. இவற்றை மீறி எவராவது நடந்தால் அவர்கள் அடுத்த கதையின்றி வீட்டுக்கு அனுப்பப்படுவர். அதையும் எதிர்த்தால் கிரிமினல் குற்றத்திற்கு ஆளாக நேரிடும். இத்தகைய தார்மீகக் கோட்பாட்டை நம் நாட்டுத் தொழிலாளி வர்க்கத்திடம், உழைக்கும் ஊழியர்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தி வருபவர்கள் யூ. என். பி ஆட்சியினர். இத்தகையவர்களின் ஆட்சிக்குப் பெயர் தார்மீக, சோஷலிச, ஜனநாயக ஆட்சியினர் என்பதாகும்.

யூ. என். பி பதவிக்கு வந்த பின்பு கொண்டுவரப்பட்ட ஜனநாயக—தொழிற்சங்க விரோதச் சட்டம் அத்தியாவசிய சேவைகள் சட்டம் இச் சட்டத்தைப் பாவித்தே 1980 பொது வேலைநிறுத்தம் முறியடிக்கப்பட்டது. பல்லாயிரம் தொழிலாளர்கள்—ஊழியர்கள் வேலையைவிட்டுத் துரத்தப்பட்டனர். அவர்களில் ஒரு பகுதியினருக்கே மீண்டும் வேலை வழங்கப்பட்டது. மிகுதியானோர் இன்றும் வேலை இன்றி இருக்கிறார்கள். அவர்களில் பத்துக்கு மேற்பட்டோர் கஷ்டம் தாங்க முடியாது தற்கொலையும் செய்து கொண்டனர்.

இந்த தொழிலாள விரோதச் சட்டத்தைத்தான் அண்மையில் வங்கி ஊழியர்களின் 'சட்டப்படி வேலைசெய்யும்' தொழிற்சங்க நடவடிக்கைக்கு எதிராக அரசாங்கம் பாவித்தது. 15ஆயிரம் வங்கி ஊழியர்களின் கோரிக்கை சம்பள உயர்வு சம்மந்தமானது. அவர்களது கோரிக்கை நியாயமானதாகும். வாழ்க்கைச் செலவின் உயர்வுக்கு இன்றைய நிலையில் சம்பள உயர்வு மிகவும் அவசியமானதேயாகும். இதே போலவே சுகாதார சேவையில் உள்ள தாதிமார்களும் சம்பள உயர்வு கேட்டு தொழிற்சங்க நடவடிக்கைக்கு தயாராகி வருகிறார்கள். அவர்களுக்கும் வீட்டுக்கு அனுப்பிவிடுவதான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வங்கி ஊழியர்களின், தாதிமார்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகள் நாடு இருக்கும் நிலையில் தேச விரோதமானது என்றும், இது பயங்கரவாதிகளுக்கு உதவக் கூடியது என்றும் அரசால் கதை கட்டி விடப்பட்டுள்ளது. இப்படியான பிர

(6-ம் பக்கம் பார்க்க)

# சர்வதேச மகளிர் தினத்தில்

## பெண்களின் தலையில் குண்டாந்தடியடி!

மார்ச் 8ம் திகதி சர்வ சர்வதேச மகளிர் தினமாகும். உலகம் பூராவும் இத்தினம் கொண்டாடப்படுவதாகும். இலங்கை அரசாங்கமும் இத்தினத்தில் கூட்டம் வைத்து மகளிர் நலன் பற்றிப் பேசினார்கள். அதேவேளை கொழும்பில் மகளிர் தினக் கமிட்டி ஒழுங்கு செய்த பெண்கள் ஊர்வலத்தை தடுத்து குண்டாந்தடிப் பிரயோகமும், கண்ணீர் புகைப் பாவிப்பும் பொலிசாரால் நடத்தப்பட்டது. இதில் ஆண் பொலிசார் மட்டுமன்றிப் பெண் பொலிசாரும் கலந்து கொண்டுள்ளனர். இப்பொலிஸ் தாக்குதலில் ஒரு பெண்ணின் தலை உடைக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப் பட்டார். பெண்கள் தூஷிக்கப் பட்டுள்ளனர். நான்கு பேர் கைதுசெய்யப்பட்டனர்,

கொழும்பில் இவ் ஊர்வலத்திற்கும் புதிய நகர மண்டபத்தில் கூட்டம் நடத்துவதற்கும் ஏற்கனவே பொலிஸ் அனுமதியை மகளிர் தினக் கமிட்டி பெற்றிருந்தும்

(6-ம் பக்கம் பார்க்க)

# பண்டாரியின் விஜயம் பலன் ஏதும் அளிக்குமா?

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு வேண்டும். இதையே இலங்கையினதும் இந்தியாவினதும் பெரும்பான்மை மக்கள் விரும்புகிறார்கள். அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை முன் வைத்தே முன்பு இந்தியாவின் விஷேசப் பிரதிநிதியாக திரு. ஜி, பார்த்தசாரதி இரு தடவைகள் இங்கு வந்துசென்றார். பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோதிலும் பலாபலன் எதுவும் ஏற்படவில்லை. அதற்கான பொறுப்பு இந்தியாவிடமோ அன்றி பார்த்தசாரதியிடமோ இல்லை. நியாயமான தீர்வை உருவாக்க மறுத்த இலங்கை அரசிடமே குறைகாண வேண்டும்.

இப்பொழுது இரண்டாவது விஷேச பிரதிநிதியாக இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளர் திரு, ரொமேஷ் பண்டாரி வந்து சென்றுள்ளார். அவர் அரசின் தலைவர்களுடனும் எதிர்க்கட்சித் தலைவர்களுடனும் இனப் பிரச்சினை பற்றிய அரசியல் தீர்வுக்கு ஒரு புதிய தளம் உருவாக்க முயன்றுள்ளார். இந்தியாவின் பக்கத்தில் இருந்து பல்வேறு முயற்சிகளும், விஷேசப் பிரதிநிதிகளும் வந்துசென்றாலும் தீர்வுக்கான அடிப்படை இலங்கை அரசிடமே இருக்கிறது. பார்த்தசாரதி வந்து சென்றதிற்கும் தற்போது பண்டாரி வந்த காலத்தின்குமிடையில் இலங்கை அரசின் பக்கத்தில் ஏதாவது சாதகமான மாற்றங்கள் தோன்றி இருக்கிறதா என்பதைப் பண்டாரி நாடி பிடித்துப் பார்த்திருக்கிறார். இந்த நாடிபிடிப்பைப் பற்றி இந்தியா ஆராய உள்ளது என்றும் கூறப்படுகின்றது. தொடர்ந்தும் மருந்துவகைகளின் மூலம் சிகிச்சை நடைபெறுமா அல்லது சத்திர சிகிச்சை அவசியமா என்பதைத் தீர்மானிக்க பண்டாரியின் நாடி பிடிப்பு உதவக் கூடும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இனப்பிரச்சினையின் தீர்வு பற்றி இலங்கை அரசாங்கம் நடந்துகொள்ளும் விதம் சர்வதேச ரீதியில் அதிருப்தியை அளித்து வருகின்றது. இது இந்தியாவின் பிராந்திய நலன் சார்ந்த பிரசாரத்திற்கு வாய்ப்பானதொன்றாக அமைகின்றது. ஒவ்வொரு தடவையிலும் ஒவ்வொரு சாட்டுக் கூறி இனப்பிரச்சினையின் தீர்வு தட்டிக்கழிக்கப் படுகிறது. சர்வகட்சி மாநாடு அர்த்தமற்றதாக்கப்பட்டது. அரசியல் தீர்வுக்கு ஆலோசனை வழங்க வந்த பார்த்தசாரதி தமிழர் என்றும் கூறப்பட்டது. சரி அப்படியாயின் தமிழர் அல்லாத பண்டாரியின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக் கொள்ளுமா? இவ்வாறு நொண்டிச் சாட்டுகளை கூறிக் காலம் கடத்தி தனது உள்நோக்கத்தை அடைந்துவிடலாம்என யூ.என். பியினர் கனவுகாண்கின்றனர் அல்லது தனது வாழ்நாளில் இப்படியான ஒரு தீர்வு வந்ததாகச் சரித்திரத்தில் ஒரு சம்பவம் இடம்பெற்றுவிடக் கூடாது என்பதில் ஜனாதிபதி ஜே. ஆர். விருப்பம் கொண்டுள்ளாரா என்பதும் புரியவில்லை.

இலங்கை அரசு இனப் பிரச்சினைக்கு எண்ணை வார்க்க நிற்கிறதே தவிர அதன் நியாயமான தீர்வை நாடவில்லை. அரசியல் தீர்வுக்கு உள்ள தடை 'பயங்கரவாதம்' என்று கூறுகிறது. அதனாலேயே முதலில் ராணுவத் தீர்வு வேண்டும் என்றும், அதன் பின்பே அரசியல் தீர்வு என்றும் அடித்துக் கூறி வருகின்றது. ராணுவத் தீர்வு என்ற வழி முழு நாட்டையும் சர்வ நாசத்திற்கே இட்டுச் செல்லும். தமது சொந்த நாடு, சொந்த மக்கள், தமது சொந்தப் பிரச்சினை இவற்றை நீதியாகவும், நிதானமாகவும் தீர்த்து வைக்கத் தவறிய அரசின் பேரினவாத வெறிச் செயல்கள் தான் இன்றைய நிலையைத் தோற்றுவித்தன என்பதைப் பார்க்க முடியாத பரிதாபகரமான நிலையிலேயே ஆட்சியாளர்கள் உள்ளனர். அமெரிக்க எசமானர்களுக்கும், அவர்களது கூட்டாளிகளையும் திருப்திப்படுத்தி மகிழ்விப்பதற்காக நாட்டு மக்கள் மத்தியில் ஒரு இணக்கமான அரசியல் தீர்வு ஏற்படுவதை வெண்டுமென்றே தட்டிக்கழித்து வருகிறார்கள். இத் தட்டிக்கழிப்பு இந்தியாவை இப்பிரச்சினையில் தலையிட அதிகளவு சந்தர்ப்பத்தைக் கொடுத்து வருகிறது.

அரசியல் தீர்வுக்கு இந்நாட்டில் இருந்தும் அயல் நாடுகளில் இருந்தும் வந்த நல்ல கருத்துக்களை எல்லாம் அரசும் அதன் தலைவர்களும் உதாசீனம் செய்தே வந்துள்ளனர். இந்நிலையில் இந்தியாவின் விஷேசப் பிரதிநிதி பண்டாரி பலரின் கருத்துக்களையும் கேட்டறிந்து அரசியல் தீர்வின் அவசியத்தை வற்புறுத்திச் சென்றுள்ளார். இதை எவ்வளவு தூரத்திற்கு இரும்புக்காது கொண்ட இலங்கை அரசு செவிமடுத்ததோ தெரியவில்லை. எது எப்படியானாலும் பண்டாரியின் விஜயத்தின் சாதக பாதக அம்சங்களைச் சற்றுப் போறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

## சம்பவங்களும் அதன் போக்குகளும்

சமரன்

# கூட்டணித் தலைவர்கள் இந்தியாவில் குடியேற்றம்!

தமிழ் மக்களைக் கடவுள் தான் காப்பாற்றணேண்டும் என்று கூறி கண்களை மூடிக் கொண்டவர் அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம். அவருக்குப்பின் தமிழ் மக்களுக்கு தலைமைதாங்க தத்துவம் பெற்றுக்கொண்டவர் அ. அமிர்தலிங்கம். தமது தலைவர் கூறிய தீர்க்கதரிசனத்தில் அதிக நம்பிக்கை கொண்ட காரணத்தாலே என்னவோ திரு. அமிர்தலிங்கமும் அவரது கூட்டாளிகளும் தற்போது தமிழ் மக்களிடையே இல்லை. இந்தியாவில் இருந்துவருகிறார்கள். இங்கு இருக்கமுடியாத நிலையிலோ அல்லது அரசினால் தேடப்படக் கூடிய தலைமறைவு நிலையிலோ அவர்கள் இந்தியா செல்லவில்லை. அப்படி இருந்தும் நீண்ட நாட்களுக்கு முன்பே அதாவது 83 யூலை இனவாத வன்செயல்களுடன் அவர்கள் தமிழ்நாட்

பல்கலைக் கழகங்களிலே படிப்பு, அங்கிருந்து லண்டன், கனடா, அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளில் வாழ்க்கையை விரிவுபடுத்த முயற்சிகள், வியாபாரம் செய்வோர் ஒருபுறம் திருமணங்களை நடத்துவோர் மறுபுறம், கடைகள், ஹோட்டேல்கள் என்று விஷயங்கள் விரிவடைந்து கொண்டே செல்கின்றன. எல்லாம் நமது லட்சியத்தை நிறைவெற்றத் தான் என்று கூறினால் அதை

ங்கள் தோன்றி இருக்கிறதா என்பதைப் பண்டாரி நாடி

ஆர். விருப்பம் கொண்டுள ளாரா என்பதும் புரியவில்லை.

அதிக நம்பிக்கை கொண்ட காரணத்தாலே என்

ளுக்கு முன்பே அதாவது 83 யூலை இனவாத வன்செயல்களுடன் அவர்கள் தமிழ்நாட்டில் குடியேறி விட்டார்கள். பெட்டி, படுக்கை, பெண்டில் பிள்ளைகளுடன் தமிழ் நாட்டில் பரவாயில்லாத வாழ்க்கை கிடைத்துள்ளது. இடையிடையே அறிக்கைகளை விட்டு தமது பெயர்களை தமிழ் மக்களுக்கு ஞாபகப் படுத்திக் கொள்வார்கள். தமது பாராளுமன்ற வெற்றிக்காகவும், பதவி பட்டங்களுக்காகவும் யார் யார் தெருவெல்லாம் தமிழீழ முழக்கம் செய்தார்களோ அந்தத் தலைவர்களும் அவர்களது நெருங்கிய தொண்டர்களும் இன்று இந்தியாவிலே இருக்கிறார்கள்.

இன்று தமிழ் மக்கள் உயிர், உடமைகள் இழந்து தாங்கமுடியாத துன்பத்தில் வாழ்வோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் இளைஞர்கள் சிறைக் கூடங்களில் சித்திரவதை முகாங்களில் வதைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல இளைஞர்கள் தமது இன் உயிர்களையே அர்ப்பணித்தும் இருக்கிறார்கள். பலர் மறைந்து வாழ்கிறார்கள். இதுவரை தமிழ்மக்கள் கண்டிராத பேரினவாதக் கொடுமைகளால் சுற்றி வளைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் கூட்டணித் தலைவர்களும் அவர்களது நெருங்கிய தொண்டர்களும் தமிழ் நாட்டிலே பத்திரமாக வாழ்ந்து வருகிறார்கள். தமிழ் நாட்டு அரச செலவிலே வாழ்க்கை, பிள்ளைகளுக்கு

செல்கின்றன. எல்லாம் நமது லட்சியத்தை நிறைவெற்றத் தான் என்று கூறினால் அதை நம்ப நாலுபேர் இருக்கும் போது அவர்கள் என்ன வித்தைதான் காட்டமாட்டார்கள்.

இங்கு சாதாரண தமிழ் மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுச் சேர்த்த அர்ப்ப சொற்ப சொத்துக்கள் அழிக்கப்படுகின்றன. சூறையாடப் படுகின்றன, விடுதலையின் பெயரால் கூட கொள்ளையடிக்கப் படுகின்றன. அதேவேளை ஏற்கனவே அதிக சொத்து சுகங்களை பெற்றுத் தலைவர்களாகவும், தொண்டர்களாகவும் இருந்த கூட்டணியின் மேல் மட்டத்தினர் இந்தியாவிலும் அதை அனுபவிக்கிறார்கள். எங்கு சென்றாலும் சொத்து சேர்ப்பதை நிறுத்தமுடியுமா? அல்லது அதைப் பாதுகாப்பதைக் கைவிட முடியுமா? அது அவர்களுடன் கூடப் பிறந்த வர்க்கக் குணமாச்சே.

என்னதான் கஷ்டங்கள் துன்பங்கள் வந்தபோதும் தமது சொந்தநாட்டிலும், சொந்தமக்களுடனும் இருந்து போராடாமல் அயல் நாட்டிற்குசென்று அங்கு உங்களைத் தவிர தஞ்சமே இல்லை என்று மன்றாடிக் கொண்டிருப்பது உண்மையான தலைமையாக இருக்கமுடியாது. இது ஒரு வகை அடிமைத்தனத்தை எதிர்த்து மறுவகை அடிமைத் தனத்தை நிலை நிறுத்த முயலும் போக்காகும். ஒரு போராட்டத்தின் போது அயல் நாடுகளில் இருக்க வேண்டிய சந்தர்ப்பங்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

# நிதி அமைச்சர் றொனி மறுபக்கம் பார்க்கிறார்

இன்றைய அரசாங்கத்தின் தலைவரான ஜனாதிபதியும், ஏனைய பிரதான அமைச்சர்களும் ஒரே பல்லவியைத் தான் பாடி வருகின்றனர். அவர்கள் வாய்திறக்கும் ஒவ்வொரு வேளையிலும் பயங்கரவாதம் பற்றிய பல்லவி தான் வெளிவருகிறது. சில வாரங்களுக்குமுன் ஜனாதிபதி ஆற்றிய கொள்கை விளக்க உரையில் அபிவிருத்தியை நிறுத்தி சகல வளங்களையும் பயங்கரவாத ஒழிப்பிற்குப் பயன் படுத்த வேண்டும் என்றார். தேசிய பந்தோபஸ்து அமைச்சரோ போகிற இடமெல்லாம் பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டி பாதுகாப்பு நிதிக்கு மடிப்பிச்சை கேட்டு வருகிறார். பிரதமர் பயங்கரவாதத்திற்கும், இந்தியாவிற்கும் ஒரேநேரத்தில் சவால் விட்டு சண்டியை இழுத்துக் கட்டுகிறார். காணி அமைச்சர், கல்வி அமைச்சர் போன்றோர் தாங்களும் இந்த விடயத்தில் மற்றவர்களுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதைக் காட்டி வருகிறார்கள்.

பயங்கரவாதத்திற்கு எதிராக ஆங்காங்கே நிதி அமைச்சர் பேசிவந்த போதிலும் அண்மையில் அவர் மறுபக்கத்தைப் பார்த்திருக்கிறார் அதனால் அவரது பேச்சில் வித்தியாசம் தெரிகிறது. இலங்கையின் இரண்டாவது சுதந்திரவர்த்தக வலயமான பிரிகமையில் பண நோட்டுகளை அச்சடிக்கும் நிறுவனத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் பேசும் போது நிதி அமைச்சர் உண்மையை ஒப்புக்கொள்ளும் விதமாகப் பேசி இருக்கிறார். 'நாட்டில் இன்று பயங்கரவாதத்திற்குத் தான் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இந் நிலை தொடர்ந்து நீடித்தால் பொருளாதார அபிவிருத்தி பாழும் கிணற்றில் தான் விழும். வானொலி, தொலைக் காட்சி, பத்திரிகைகள் யாவும் பயங்கரவாதத்திற்குத் தான் முக்கியத்துவம் தருகின்றன. இவ்வாறு பெரிது படுத்தி மக்களை முக்கியமான கவனத்தில் இருந்து ஏன் திசை திருப்பவேண்டும். ஏன் சிலர் இவ்வாறு நடந்து கொள்கிறார்களோ தெரியவில்லை. பொருளாதார அபிவிருத்தியைப் பற்றிச் சிந்திக்காது பயங்கரவாதத்தைப் பெரிது படுத்துவதால் நாட்டு மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படாது.' இவ்வாறு நிதி அமைச்சர் பேசி இருக்கிறார். அவர் நிதி அமைச்சராக இருப்பதால் வெறும் பண நோட்டுகளை மட்டும் அச்சடித்துக் குவிப்பதால் பொருளாதாரம் வளாந்து விடாது என்பதை உணர்ந்தபடியினால் தான் இவ்வாறு பேசியுள்ளாரா? அல்லது தான் அங்கம்பெறும் ஆட்சியும் அதன் தலைவர்களும் பயங்கரவாதம் எற்ற போர்வையில் நாட்டு மக்களையும் அவர்களது வாழ்வையும் நாசப்படுத்தி வரும் நடைமுறைகளைக் கண்டு சினம் கொண்டுள்ளாரா? எப்படி இருப்பினும் முக்கியமான பதவி வகிக்கும் நிதி அமைச்சரின் உள்ளத்தில் பதிந்த உண்மைகள் வெளிவந்தது இந்த அரசின் தலைவர்களது செப்படி வித்தைகளை அம்பலமாக்கியுள்ளது. பயங்கரவாதம்—பயங்கரவாதம் என்று ஓலமிட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு நிதி அமைச்சரின் பேச்சு நல்ல தோர் உதையாகும். நாட்டு மக்களுக்கு உண்மைகளை அறிய ஒரு சந்தர்ப்பமாகும்.

# மக்களின் உள்ளக் குமுறல்களைப் பற்றி

## ஒரு கடிதம்

தமிழ் மக்கள் மத்தியில் இன்று நடக்கக்கூடாத சம்பவங்கள் பல நடந்து கொண்டே இருக்கின்றன. அரச பயங்கரவாதமும் அதன் கீழ்த்தர நடவடிக்கைகளும் தமிழ் மக்களை சொல்லொண்ணுத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. உயிர் இழந்த குடும்பங்களும், ஊனமுற்ற பலர், உடமைகளைப் பறிகொடுத்தோர் அழுதழுது கண்ணீர் வற்றிய நிலையில் காணப்படுகின்றனர். கண்ணீர் வற்றிய கண்கள் பலவற்றில் இருந்து கனல் கக்கும் ஆத்திரமும் ஆவேசமும் பிறக்கின்றன. அரசுக்கும் அரச பயங்கரவாதத்திற்கும் எதிரான மக்களின் ஆத்திர உணர்வுகளை சரியான வழிகளில் ஒழுங்குபடுத்த முடியாத ஒருவித இயலாமை மறுபுறத்தே காணப்படுகிறது. இயக்கங்கள்— இளைஞர்கள் செய்வதெல்லாம் எமக்காகத்தான் என்ற நிலையில் இருந்து இன்று மக்கள் விரக்தியைப் பெறுவும், வெறுமையைக் காணவுமான சந்தர்ப்பங்கள் உருவாக்கப் படுகின்றன. யார் எதைச் செய்தாலும் அதையிட்டு இளைஞர்களையும் இயக்கங்களையும் மக்கள் சந்தேகிக்கவும் தொடர்புபடுத்தவும் கூடிய ஒரு விமர்சன நிலை தோன்றியுள்ளது. இது இப்படி இல்லை என யாராவது வாதிட முன்வந்தால் அவர்கள் மக்களுக்கும் தமக்கும் உள்ள விரிந்த இடைவெளியைக்காண மறுப்பவர்களாகவே இருப்பர்.

ஒரு போராட்டம் முன்னேறிச் செல்லும் போது எதிரியார்? நண்பர்கள் யார்? என்பது தெளிவாக இனம் காணப்படவேண்டியது போராட்டத்தை முன்னெடுப்போரின் தலையாய கடமையாகும். இதைத் தெளிபடுத்தாது முன்செல்ல முயன்றால் நண்பர்கள் விரைவில் எதிரிகளாக்கப்பட்டு விடுவார்கள். இதை உண்மையான எதிரி தனது தற்பாதுகாப்புக்கு பலமாக்கிக்கொள்வான். அதே போல் மக்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகளை உரிய விதத்தில் கையாளாது விட்டாலும் போராட்ட சக்திகள் படிப்படியாக தனிமைப்பட நேர்ந்து விடும்.

இன்று தமிழ் மக்கள் மத்தியில் ஒரு குழப்பமான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளது. அதற்கு மாற்றுவழி காணமுடியாத நிலையில் சீரழிவுகள் தொடருகின்றன. கொள்ளைகள் சமுதாய நடைமுறையாகிவிட்டது போல் காணப்படுகின்றன. அரச, பொது, தனியார் நிறுவனங்கள் என்ற நிலையில் இருந்து கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் வீடுகள் என்பனவற்றுக்குத் தாவிய கொள்ளைகள் இன்று ஆலயத்தில் தனது அசிங்கத்தனத்தை காட்டத் தொடங்கியுள்ளது. இக்கொள்ளையர்கள் யார்? இவர்களை இவ்வாறு துணிவு கொள்ளச் செய்த சூழ்நிலைகள் யாது? இவர்கள் கையாளும் நவீன ஆயுதங்கள் எங்கிருந்து எவர் மூலம் இவர்களுக்கு கிடைத்தது? சிறிய கொள்ளையர்கள் தண்டனைக்குள்ளாகும்போது இப் பெரிய கொள்ளையர் தப்பித்து விடுவது ஏன்? இயக்கங்களின் பெயரைச் சொல்லிக் கொள்ளைகள் நடைபெறுகின்றனவா? அல்லது கீழ் மட்டம் மேல் மட்டம் என்ற விதத்தில் விஷயங்கள் இடம்பெறுகின்றதா? இவை எல்லாம் மக்கள் மத்தியில் கிளப்பப்படும் நியாயமான கேள்விகள்.

கொள்ளைகள் ஒருபுறம் தொடர மக்கள் மத்தியில் ஆங்காங்கே தோன்றும் முரண்பாடுகள் சச்சரவுகள் அணுகப்படும் விதங்கள் சர்ச்சைகளைக் கிளப்பி வருகின்றன. முன்பு பொலிஸ் நிலையங்களும், பொலிசாரும், அணுகிய அல்லது செயல்படுத்திய அதேமுறைகள் தற்போதும் புதிய வழிகளில்— பெயர்களில் நடைமுறைப்படுத்தப்படும் நிலை தோன்றியுள்ளது. பயமுறுத்தல், பலாத்காரம் பாவித்தல், தான்தோன்றித் தனமான தீர்ப்புக்களை வழங்கி அதைத் திணித்தல் போன்றன நடைபெறுகின்றன. இவ்வாறு நடந்து கொள்வதற்கு இத்தகையவர்களுக்கு யார் உரிமை வழங்குகிறார்கள். ஒரு கிராமம், அல்லது ஒரு பிரதேசம், அவற்றைச்சேர்ந்த பலதரப்பு மக்களும் ஒன்றிணைந்து ஒரு ஸ்தாபனத்தின் மூலமாக பிரச்சினைகளைக் கையாள்வது, சரிபிழையைத் தீர்மானிப்பது போன்ற நடைமுறைகளை எவரும் குறை கூறமுடியாது. ஆனால் நாலுபேர் தங்களைத் தாங்களே நியமனம் செய்து கொண்டு, துப்பாக்கி வைத்திருக்கும் தகமையை ஒரு தகுதியாக்கிக்கொண்டு மக்களுடைய பிரச்சினையில் கண்மூடித்தனமாக நடந்து கொள்ள முற்படுவது நீண்ட நாட்கள் நிலைக்காத ஒன்றாகும். நீர்க்குமிழிகள் நிலைப்பதில்லை என்பது போல் மக்களின் மேல் ஆதிக்கம் செலுத்த முற்படும் எவரும் நிலைக்கமாட்டார்கள். இது ஒருவரலாற்று நியதியாகும். மக்கள் மத்தியில் தோன்றும் சிறு பிணக்குகளில் நீதி நியாயம் கண்டு மக்களின் அபிலாஷைகளோடு இணைந்து செயல்பட மறுத்து முரட்டுத்தனம் செய்பவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் நாளை ஒரு ஆட்சி அதிகாரத்தில் எவ்வாறு நடந்து கொள்வார்களோ என்ற நியாயமான அச்சம் மக்களிடையே எழுவது எவருக்குமே நல்லதல்ல.

உரிமை கோரப்படாத பல விஷயங்கள் சர்வ சாதாரணமாகவே நடந்து வருகின்றன. இதில் ஒரு உண்மை என்னவெனில் இவ்வாறுசெய்பவர்களை ஓரிரு தினங்களில் மக்கள் அடையாளம் கண்டு விடுகிறார்கள். எதையும் யாருக்கும் மறைக்கலாம். ஆனால் மக்களுக்கு மறைக்கமுடியாது அப்படி மக்கள் உண்மைகளை அறியும்போது தனிநபர்களாயினும், இயக்கங்களாயினும் மக்கள் மத்தியில் அம்பலமாகி அது சார்ந்த ஒரு கருத்து நிலைக்கும் உள்ளாகிவருவதை காணமுடிகிறது. இந்த வகையிலே வாகனக் கடத்தல், ஆள் கடத்தல், பயமுறுத்தல், இவற்றின் மேலால் பலாத்காரம் பாவித்தல் என்பவை பற்றிய ஒரு பலமான கருத்து மக்கள் மத்தியில் பரவிவருவதைக் காணலாம்.

மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான துறைகள் குழப்பப்படுவதைப் பற்றியும் மக்களுக்கு ஒரு கருத்து உண்டு சுகாதாரசேவை, தபால் தந்திச்சேவை, போக்குவரத்துச் சேவை மற்றும் தனியார்— பொது நிறுவனங்களின் ஸ்தம்பிதம் போன்றன தேவையின் பொருட்டு தவிர்க்கமுடியாத சூழ்நிலைகளால் குழப்பமுறும்போது அதைத் தாங்கிக்கொள்ள மக்கள் தயாராகவே இருப்பர். ஆனால் தேவையற்ற சூழலில் தான்தோன்றித்தனமாக நடந்துகொள்வதன் மூலம் மக்கள் கஷ்டங்களை ஏன் அனுபவிக்கவேண்டும் என்ற நியாயமான கேள்வி எழுவது தவிர்க்கமுடியாததாகும். அரச பக்கத்தில் இருந்து ஏவப்படும் கஷ்டங்கள், துன்பங்கள் ஒருபுறம், நம் மத்தியில் இருந்து கிளப்பி விடப்படும் நீதியற்ற, வரைமுறையற்ற நடவடிக்கைகள் மறுபுறமும் என்றநிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு வருகிறார்கள். இவ்வாறு மக்கள் கருதும் இன்றைய நிலை எந்தப்போராட்டத்தின் முன்னேற்றத்திற்கும் அல்லது வெற்றிக்கும் வழி வகுக்காது. இளம் கன்று பயமறியாது இருக்கலாம். அது குறிப்பிட்ட கால அனுபவத்தால் ஏற்படும் ஒன்றல்ல. அது அனுபவமற்ற அறியாத்தனத்தின் ஒருவகை வெளிப்பாடாகவே இருக்கமுடியும்.

ஆதலால் இன்று தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியுள்ள குழப்ப நிலைகளையும் அதில் மக்கள் படும் துன்பங்கள் வேதனைகளையும் இளைஞர்களும் இயக்கங்களும் சீர்தூக்கிப் பார்த்து தவறுகளையும் தவறான செயற்பாடுகளையும் தூக்கிவீசி, மக்கள் விரோத சக்திகளை அம்பலப்படுத்தி மக்களின் அன்றாட வாழ்வைப் பாதிக்காத வண்ணம் நடந்துகொள்ளவேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். எனது இக்கருத்து ஒரு தனிநபரின் கருத்தல்ல. குறிப்பிட்டகாலம் மக்கள் மத்தியில் இருந்து சேகரிக்கப்பட்ட கருத்துக்களின் ஒரு சிறிய தொகுப்பாகும்.

அன்பான செம்பதாகை இதுபோன்ற கருத்துக்களை ஏற்கனவே அவ்வப் போது வெளியிட்டு வந்ததினால் எனக்கும் இவற்றைத் தொகுத்துத்தர ஒரு துணிவு ஏற்பட்டது. நிச்சயம் செம்பதாகை எனது இக்கருத்துக்களைப் பிரசுரிக்கும் என்று நம்புகிறேன்.

நன்றி. வணக்கம்.

**சி. வ. சிவலோகநாதன்**
யாழ்ப்பாணம்.

# உழைக்கும் பெண்கள் நிலை

நமது இன்றைய சமூக அமைப்பிலே பெண்களைப் பற்றிய சமுதாயப் பார்வையிலும் அவர்களை நடாத்தும் நடைமுறைகளிலும் நிலப்பிரபுத்துவகால கலாச்சார வழங்கங்களும், மூடநம்பிக்கைகளும் வலுவுடையவையாக இன்றும் இருப்பதைக் காணலாம். இவற்றால் வரும் பல்வேறுவிதத் தாக்கங்களையும், பாதிப்புகளையும் பெண்கள் சமுதாய ரீதியிலும், தனிப்பட்ட ரீதியிலும் அனுபவிக்க வேண்டியவர்களாக உள்ளனர். இவற்றுடன் கூடவே பொருளாதாரச் சுரண்டல், அரசியல் அடக்குமுறை போன்றவற்றாலும் பெண்களின் நாளாந்த வாழ்க்கை அமுக்கப்படுகின்றன.

நாட்டின் சனத்தொகையில் கிட்டத்தட்ட அரைவாசிப் பங்கினர் பெண்களாக இருக்கின்ற அதேவேளை அவர்கள் பல வர்க்கப்பிரிவுகளுக்குள் அடங்குகின்றனர் என்பதை எக்காரணம் கொண்டும் மறந்துவிடலாகாது. ஆளும் வர்க்கம் தொட்டு அடிமட்டத்திலான உழைக்கும் வர்க்கம் வரை பெண்களும் அந்தந்த வர்க்கங்களின் நிலைப்பாடுகளுக்கு ஏற்பவே வாழ்ந்து வருகின்றனர். நமது நாட்டுப் பெண்களில் உழைக்கும் வர்க்கத்தை உள்ளடக்கியோரின் எண்ணிக்கை ஏகப் பெரும்பான்மையானதாகும் உழைக்கும் பெண்கள் என்று தொகுக்கும்போது உடல் உழைப்பில் ஈடுபடுவோரையும், மூளை உழைப்பில் ஈடுபடுவோரையும் சேர்த்தே நோக்கவேண்டும். உடல் உழைப்பில் ஈடுபடும் பெண்களில் தொழிலாளர்களாகவும். விவசாயத் தொழில்களில் ஈடுபடுபவர்களாகவும், ஊதியமற்ற வீட்டுத் தொழில்களில் உழைப்பாளர்களாகவும் பெண்களைப் பார்க்க முடியும். இலங்கையில் பெருந்தோட்டத்துறையான தேயிலை. ரப்பர், தெங்கு உற்பத்திகளில் பெருந்தொகையான பெண்கள் உடல் உழைப்பில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்களின் சம்பள விகிதங்கள் மிகவும் குறைவானவையாகும். இருப்பிடங்கள், சுகாதாரம், கல்வி என்பன யாவும் மிகக் கீழ் மட்டத்திலேயே உள்ளன. நீண்டகாலப் போராட்டத்திற்குப் பின்பு அண்மையில் தான் தோட்டப்புறப் பெண் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம சம்பளம் கிடைத்தது. அவர்கள் தான் அரச துறைகளில் ஆகக் குறைந்த சம்பளத்தைப் பெறும் பெண்களாகவும் உள்ளனர். ஏனைய, தொழில் ஆலைகளில் அது அரசின் பொறுப்பில் இருப்பினும், தனியாரிடம் இருப்பினும் அங்கேயும் பெண்தொழிலாளர்களுக்கான சம்பளங்கள் குறைந்த நிலையிலே வழங்கப்படுகின்றன. அரசு அதிகம் பறைசாற்றிய சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண்கள் அதிக எண்ணிக்கையில் வேலை செய்கின்றனர். அவர்களது சம்பள விகிதங்கள் படுமோசமானவையாகும். அந்நியப் பெரும் முதலாளிகளின் லாபத்திற்காக நமது பெண்களின் உழைப்பு குறைந்த கூலியில் அங்கு பிழிந்தெடுக்கப்படுகின்றது. பெண்களை இரவில் வேலைசெய்வதற்கு நிர்ப்பந்திக்கும் சட்டம் கூட அண்மையில்இந்ததார்மீக அரசால் கொண்டுவரப்பட்டது. இன்று அனேகமான தொழிற்சாலைகளிலும், நிறுவனங்களிலும் பெண்களை வேலைக்கமர்த்தும் போக்கு அதிகரித்துள்ளது. அதற்கு ஒரே காரணம் குறைந்த கூலியில் கூடிய உழைப்பை உறுஞ்சுவதற்கேயாகும்.

இலங்கை ஒரு விவசாய நாடாக இருப்பதால் விவசாயமும் அதைச் சார்ந்த துறைகளிலும் பெண்கள் அதிகளவு விவசாயக் கூலிகளாக உடல் உழைப்பில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் பெறும் உத்தரவாதமற்ற சம்பளங்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபாடானவையாகும். விவசாயக் கூலிகளாக வேலைசெய்யும் பெண்களுக்கு வழங்கப்படும் குறைந்த சம்பளமானது அவர்களது வாழ்க்கைச் சுமைகளுக்கு ஈடுசெய்யமுடியாத காரணத்தால் தமது பிள்ளைகளைச் சிறு வயதிலேயே பாடசாலைக்கு அனுப்பாது தம்முடன் வேலைக்குக் கூட்டிச் செல்லுகிறார்கள். இது உழைக்கும் பெண்கள் மத்தியிலான கல்வி அறிவை சீரழித்து விடுகின்றது.

ஊதியமற்ற வீட்டு உழைப்பாளர்களாக உள்ள பெண்கள் தத்தமது வீடுகளில் வீட்டுவேலைகள் சகலதையும் செய்து வருகின்றனர். வீட்டு வேலைகளை காலையில் இருந்து இரவுவரை செய்யும் இவர்களது உழைப்பிற்கு உரிய இடம் வழங்கப்படுவதில்லை, அதை ஒரு உழைப்பாகவே கவனிக்கப்படாத ஒரு பிற்போக்குநிலை இருந்து வருகிறது.

மூளை உழைப்பாளர்களாக உள்ள பெண்களில் கீழ் மத்தியதர வர்க்கத்திற்கும் அதற்குக் கீழ்ப்பட்ட வர்க்கப் பிரிவினரையும் அதிகம் காண முடியும். பெருந்தொகை அரசாங்க ஊழியர்களான பெண்கள், தனியார், கூட்டுத்தாபன, கூட்டுறவுத்துறைகளில் வேலைசெய்யும் பெண்கள் போன்ற பல் வேறு வகையினரின் சம்பளங்கள் மிகவும் வேதனைக்குரியவையாகும். ஆசிரியர்கள், எழுதுவினைஞர் போன்றதொழில்களில் உள்ள பெண்கள் பார்வைக்கு உத்தியோகம் பார்ப்பவர்கள் போல் தோன்றினாலும் அவர்களின் சம்பள விகிதங்கள் வாழ்க்கையை சமாளிக்கமுடியாது உள்ளதைப் பலர் கவனிப்பதில்லை. காலனித்துவ கால அரச உத்தியோக வரட்டுக் கௌரவத்தை மட்டும் வைத்திருந்து பயன் ஏதும் இல்லை என்ற உண்மை இன்று பெண்களாலும் உணரப்பட்டு வருகின்றது.

மொத்தத்தில் இலங்கை உழைக்கும் பெண்களின் எண்ணிக்கை அவர்கள் ஆக்கும் சனத்தொகை விகிதாசாரத்தில் ஏகப் பெரும்பான்மையினராகும். அவர்கள் நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், புத்தி

(5-ம் பக்கம் பார்க்க)

# கம்பூச்சிய மக்களின் விடுதலைப் போராட்டம் முன்னுதாரணம் காட்டி முன்னேறுகின்றது!

ஶ்ரீதரன்

தென் கிழக்கு ஆசியாவிலே இந்தோ சீன நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகளில் ஒன்றே கம்பூச்சியா. அந்நாட்டின் பழம் பெரும் நாகரீகத்திற்கு சான்ருக புகழ் மிக்க அங்கர் வாட் கோவில்களை இன்றும் காண முடியும். கம்பூச்சியா முன்பு கம்போடியா என்றே அழைக்கப்பட்டது. மன்னர் ஆட்சியின் கீழ் இருந்து வந்த கம்பூச்சியா தேசப்பற்று மிக்க இளவரசர் நொறடோம் சிகானுக்கின் தலைமையில் பல மாற்றங்களைப் பெற்றது. இளவரசர் சிகானூக் தனது அரச சுகபோகங்கள் பலவற்றைத் துறந்து மக்களின் ஜனநாயக உணர்வுகளுக்கு ஏற்ற விதத்தில் ஆட்சி நடத்தினர். சுயசார்பில் நம்பிக்கை வைத்து கம்பூச்சியாவின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும், சர்வதேச ரீதியில் நடுநிலைக் கொள்கையை உறுதியாகப் பின்பற்றவும் அவர் எடுத்த நடவடிக்கைகள் அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற வல்லரசுகளுக்கு பெரும் தலைவலியைக் கொடுத்தது. கம்பூச்சியாவின் அயல் நாடும் மற்றொரு இந்தோசீன நாடுமான வியட்நாமில் அமெரிக்கா தனது நீண்ட ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்தி வந்த அறுபதுகளின் பிற்பகுதியிலேயே சிகானூக் கம்பூச்சியாவில் நடுநிலைக் கொள்கையை நிலைநிறுத்த முயன்ருர். ஆனல் அமெரிக்காவும்—சி. ஐ. ஏயும் விரைவாகவே ஒரு முடிவுக்கு வந்து சிகானூக்கை கவிழ்க்க முடிவு செய்தனர். சிகானூக் வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டு மாஸ்கோவில் இருந்த வேளை அவரது ஜனநாயக அரசு அமெரிக்கச் சதி மூலம் 1970 மார்ச் மாதத்தில் கவிழ்க்கப்பட்டது. லொன் நொல் ராணுவத் தளபதி பொம்மை அரசாங்கத்தின் தலைவனுக்கப்பட்டான்.

மாஸ்கோவில் இருந்து சீனுவிற்குப் புறப்பட இருந்த கடைசிவேளையிலேயே சிகானூக்கு ஆட்சிக் கவிழ்ப்பு பற்றிய செய்தி தெரிவிக்கப்பட்டது. அன்றைய சோவியத் பிரதமர் கொஜிசின் சிகானூக்கிடம் 'நீங்கள் அதிகாரத்தில் இல்லாதசமயம் சீனர்கள் என்னமாதிரி நடந்து கொள்வார்கள் என்பதைப் பார்க்கப் போகிறீர்கள்' என்று கூறியபோது 'நான் பீக்கிங்கிற்குச் சென்று எனது பழைய நண்பன் சௌ என் லாயின் ஆதரவைப் பெறுவேன்' என்று சிகானூக் பதிலளித்தார். (வில்பிரட் பேச்சட்டிற்கு ளித்த பேட்டி சீ. ஐ. ஏயுடனுன எனது யுத்தம்-சிகானூக்) சிகானூக் பீக்கிங் வந்தபோது முழு அரசமரியாதையுடனும் வரவேற்கப்பட்டார். சீனுவில் இருந்தவாறே கம்பூச்சிய தேசிய அரசை நிறுவி அதற்கு பல உலகநாடுகளின் அங்கீகாரத்தையும் பெறமுடிந்தது. அதேவேளை கம்பூச்சியாவின் அமெரிக்கப் பொம்மை ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக சிகானூக் கம்பூச்சியா மக்களது ஆயுதப்போராட்டத்திற்கு தலைமை தாங்கி வந்த கம்யூனிஸ்ட் கட்சியுடனும், ஏனைய தேசபக்த சக்திகளுடனும் ஐக்கியப்பட்டார். கம்பூச்சியா, வியட்நாம், லாவோஸ் ஆகிய மூன்று இந்தோசீன நாடுகளும் ஐக்கியப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடி வெற்றி பெறுவது என்ற திடசங்கற்பத்தையும் எடுத்கொண்டனர்.

கம்பூச்சிய மக்கள் ஐந்து ஆண்டுகள் உறுதியான போராட்டம் நடத்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையான லொன் நொல் ராணுவக் கும்பலைத் தோற்கடித்தனர். இப்போராட்டத்தில் கம்பூச்சிய கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் தலைவர்களும் கம்பூச்சிய மக்களுக்கு அளித்த தலைமை முக்கியத்துவம் மிக்கதாகும். அவர்களது போர்முறை, தந்திரோபாயங்கள், கொள்கைகள், நடைமுறைகள். நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் எதையும் செய்யத் துணிந்த அர்ப்பணிப்பு சமகாலத்தில் ஏனைய நாட்டு விடுதலை இயக்கங்களால் படித்துக் கொள்ளவேண்டிய முக்கிய படிப்பினைகளாகும்.

1975ம் ஆண்டிற்குப்பின் விடுதலை பெற்ற கம்பூச்சிய ஜனநாயக கம்பூச்சியாவாக தன்னைக் கட்டி வளர்க்க முற்பட்டது. இக்காலகட்டத்திலேயே விடுதலை பெற்ற அயல் நாடான வியட்நாம் கம்பூச்சியாவின் உள் விவகாரங்களில் அத்துமீறிப் பிரவேசிக்க முற்பட்டது. வியட்நாம் நீண்டகாலமாக இந்தோ—சீன சம்மேளனத்தை ஏற்படுத்தத் திட்டமிருந்தது. அதை படிப்படியாக அமுல் நடத்த எண்ணிய வியட்நாம் 1966—67ல் லாவோஸ், கம்பூச்சியா ஊடாக தென் வியட்நாமுக்கு போக்குவரத்து ஏற்பாடொன்றிற்கு வேண்டுகோள் விடுத்தது. அப்போதிருந்த கம்போடியத் தலைவர்கள் இதனல் எதிர்காலத்தில் தமது நாட்டிற்கு ஏற்பட வரும் ஆபத்தை உணர்ந்து ஹனேய்யுடனும் தென் வியட்நாம் விடுதலை முன்னணித் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியது. ஹனேயும், தென்வியட்நாமிய விடுதலை முன்னணியும் அப்போதிருந்த கம்பூச்சிய எல்லைகளை ஏற்றுக்கொள்வதாகப் பிரகடனம் செய்தார்கள். எனவே கம்பூச்சியாவிற்கும் வியட்நாமிற்கும் எந்தவித எல்லைப் பிரச்சினையும் இல்லையென்பதை நாம் கோடிட்டுக் காட்டவிரும்புகிருேம். அது மட்டுமல்ல தற்போது அங்கீகரிக்கப்பட்ட கம்பூச்சிய எல்லைக்குள் இருக்கும் பிரதேசம் உண்மையில் அது முன்னர் கொண்டிருந்த நிலப்பரப்பில் சுமார் அரைவாசியாகும். பிரஞ்சு ஆதிக்கத்திற்குட்பட்ட காலத்தில் கம்பூச்சியாவின் நிலப்பரப்பு கிட்டத்தட்ட அரைவாசியாக்கப்பட்டது. அது எவ்வாருயினும் கம்பூச்சியா தான் இழந்த நிலப்பரப்பைக் கோரவில்லை. அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச எல்லைக்குட்பட்ட தனது பிரதேசத்தில் சுதந்திரமாக வாழவே விரும்புகிறது.

வியட்நாம் விடுதலை யுத்தத்தின் போது கம்போடிய எல்லைப் பகுதிகளில் இருந்த தளங்களும், போக்குவரத்துப் பாதைகளும் மிகவும் முக்கியமானவையாக அச்சமயம் திகழ்ந்தன. அவை வியட்கொங் புகலிடம், ஹோசீமின் பாதை என அழைக்கப்பட்டன. இதன் காரணமாகவே 1970ல் இந்தோ—சீன உச்சி மகாநாட்டில் ''கம்பூச்சிய மக்களின் தன்னலமற்ற உதவிகளை வியட்நாம் என்றும் நினைவில் வைத்திருக்கும்', எனக் குறிப்பிடப்பட்டது. அவ்வாறு உதவிசெய்த கம்பூச்சியாவிற்குள்ளே இன்று இரண்டு இலட்சம் வியட்நாமியப் படைகள் ஆக்கிரமிப்பு வெறியாட்டம் நடத்துகிறது.

வியட்நாம் விடுதலை பெற்றபின் வியட்நாமியத் தலைவர்கள் தமது முன்னைய பிரகடனங்களுக்கு முரணுக தமது துருப்புக்களின் ஒரு பகுதியை கம்பூச்சியாவில் விட்டுவைத்தனர். கம்பூச்சியாவின் எல்லைகளை அங்கீகரிக்க மறுத்தனர். ''முன்பு அமெரிக்க நெருக்குதல் காரணமாகவே'' தாம் எல்லைகளை அங்கீகரித்ததாகத் தெரிவித்தனர். அடிக்கடி எல்லைகளை மாற்றியமைத்தனர். 1975ல் கம்பூச்சியாவின் வெய்தீவு வியட்நாமால் கைப்பற்றப்பட்டது. 1977 செப்டம்பரில் பெருமளவு தாக்குதல்கள் இடம்பெற்றன. 1978 ஜனவரியில் முழுக் கம்பூச்சியாவும் கைப்பற்றப்பட்டது. ஹெங் சமறீன் பொம்மை ஆட்சியின் தலைவனுக்கப்பட்டான்.

கம்பூச்சியாவின் சனத்தொகை எண்பது இலட்சம் வியட்நாமின் சனத்தொகை ஐந்து கோடி. கம்பூச்சிய மக்களை மிகச் சுலபமாக அடிபணிய வைக்கலாம் என வியட்நாமும் சோவியத் யூனியனும் தப்புக்கணக்குப் போட்டிருந்தன. சுமார் ஏழு இலட்சம் ராணுவத்தை உடைய வியட்நாமியர் எண்பதினுயிரம் பேரைக்கொண்ட கம்பூச்சிய படையினரைச் சுலபமாகப் பணிய வைக்கலாமென எண்ணினர். வியட்நாமிடம் சுமார் 1500 நடுத்தர தாங்கிகள் 1978ல் இருந்தது. கம்பூச்சியாவில் ஒரு சில தாங்கிகளே இருந்தது. அமெரிக்காவிடமிருந்து கைப்பற்றிய பல்வேறு நவீன ஆயுதங்களையும் வியட்நாம் கொண்டிருக்கிறது.

கம்பூச்சியாவில் இன்று விடுதலைப்படைகளின் எண்ணிக்கை சுமார் அறுபதாயிரம் என மதிப்பிடப் பட்டுள்ளது. கிட்டத்தட்ட இவை அனைத்துமே கெமர் றூச் படைகள் எனக் கூறலாம். சிகானூக் தலைமையில் உள்ள படையினர் சுமார் ஐயாயிரம் சொன் சன் தலைமையிலான பகுதியினரிடமும் சுமார் ஐயாயிரம்பேர் உள்ளனர். எனவே யுத்தகளத்தின் விதியை நிர்ணயிப்பது கியூ சம்பான், பொல் பொட் தலைமையிலான கெமர் றூச் படைகளின் கைகளில்

(5-ம் பக்கம் பார்க்க)

# ஆக்கிரமிப்பை மூடிமறைக்க சீனுவின்மீது பழி சுமத்தலா?

கடந்த ஜனவரி 24ம் திகதி சோவியத் செய்தித் தாபனமான டாஸ் சீனவார ஆங்கில சஞ்சிகையான பீக்கிங் றிவீயூவைத் தாக்கியும் சீனுவை அவதூறு செய்தும் செய்தியொன்றை வெளியிட்டது. பீக்கிங் றிவீயூ அதன் ஜனவரி 21ம் திகதிய இதழில் 'ஆப்பானிஸ்தான் சகதிக்குள் சோவியத் நடைபயில்கிறது'. என்றதலைப்பில் வெளியிட்ட கட்டுரையையே டாஸ் செய்தித்தாபனத்தால் 'பொறுத்துக்கொள்ளமுடியவில்லை.

'அமெரிக்காவிற்கு அடுத்ததாக பீக்கிங் பிரகடனப் படுத்தப்படாத யுத்தமொன்றை ஆப்கானின்தான் மீது தொடுத்துள்ளது'. என்றும் 'வாஷிங்டன், இஸ்லாமாபாத், பீக்கிங் எதிர்ப்புரட்சி ஆதரவினுல் 3500 கோடி ஆப்கானில் நட்டம் ஏற்பட்டுள்ளது' என்று டாஸ் கூறிற்று.

'ஆப்கானிஸ்தான் அரசாங்கத்தின் சட்டபூர்வமான வேண்டுகோளின்படி வரையறுக்கப்பட்ட சோவியத் இராணுவத்தினர் அன்னிய ஆக்கிரமிப்பையும், ஆயுதம் தாங்கிய தலையீட்டையும் முறியடிப்பதற்காக அந்த நாட்டிற்குள் பிரவேசித்தனர் என்று கூறுவதன் மூலம் டாஸ் சோவியத் இராணுவத்தினர் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ளமைக்கு நியாயம் கற்பிக்க முயன்றுள்ளது.'

ஆப்கானிஸ்தானில் சோவியத் படை எவ்வளவு 'வரையறுக்கப்பட்ட' எண்ணிக்கை என்பதைப் பார்ப்போம். ஆக்கிரமிப்பு ஆரம்பமானபோது சோவியத் படையின் எண்ணிக்கை ஒரு இலட்சமென பல்வேறு செய்தித்தாபன அறிக்கைகள் தெரிவித்தன, இன்று அது இரண்டு இலட்சமாகியுள்ளது. பிரென்சு செய்தித்தாபனமான ஏ எவ் பியின் தகவல் ஒன்றின்படி கொன்ஸ்ரன்ரீன் சேனன்கோ பதவியேற்றபின் ஆப்கானிஸ்தானில் சோவியத் படையின் எண்ணிக்கை 25 வீதத்தால் அதிகரித்துள்ளது. இதையே டாஸ் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையென்கிறது போலும்.

'சட்டபூர்வமான' வேண்டுகோளைப் பார்ப்போம். 1979 டிசம்பரில் சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானுக்குள் பிரவேசித்தும் ஆப்கான் பிரதமர் ஹபிசுல்லா அமீன் கொலைசெய்யப்பட்டார். எனவே தன்னை கொலை செய்வதற்கு சோவியத் படைகளை காலம் சென்றபிரதமர் அமீன் வரவழைத்திருக்க மாட்டார் என்பது யாவருக்கும் விளங்கும். அமீனின் இடத்திற்கு பாபரக் கர்மால் 1980 ஜனவரியில் நியமிக்கப்பட்டார்—இது சோவியப் படைகள் நாட்டிற்குள் வந்தபிற்பாடு இடம்பெற்ற சம்பவம். சோவியத் படைகள் நாட்டிற்குள் வருவதற்கு முன் அரசாங்கம் அமைக்காத ஒருவர் எவ்வாறு 'சட்டபூர்வமான' வேண்டுகோள் விடுத்திருக்கமுடியும். 'கள்வனைப் பிடி' என்று கள்வன் கத்துவதைப்போலவே ஆப்கானிஸ்தானில் 'அன்னிய ஆக்கிரமிப்பு, ஆயுதம் தாங்கிய தலையீடு' இருப்பதாக டாஸ் கூறுகிறது, இரண்டாம் உலக யுத்தத்தின்பின் சோவியத் யூனியன் மட்டுமே ஆப்கானிஸ்தானுக்குள் படையை அனுப்பி சொல்லொணுத் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது ஆப்கானிஸ்தான் தேசிய ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் ஒருவரின் தகவலின்படி சடந்த ஐந்துவருடங்களில் சோவியத் ஆக்கிரமிப்பு படைகள் பத்து இலட்சம் அப்பாவி ஆப்கான் மக்களைக் கொன்றும் ஒரு இலட்சம் பேருக்கு என்ன நடந்தது என்று தெரியாமற் செய்தும், நாற்பது இலட்சம் பேரை அண்டை நாடுகளுக்கு தப்பியோடச் செய்தும் இருக்கிறது. சோவியத் ஆக்கிரமிப்பால் ஆப்கானிஸ்தானின் பொருளாதாரமும், கலாச்சாரமும் நாசமாக்கப் பட்டுள்ளது.

சோவியத் செய்தி ஸ்தாபனம் 'சீனுவும் யப்பானிய இராணுவ ஆதிக்கத்திற்கு எதிராக சோவியத்தின் உதவியில் தங்கியிருந்தது என்பதை கவனிக்கவேண்டுமென' குறிப்பிட்டுள்ளது. மிகவும் நன்று. இரண்டாம் உலக யுத்தத்தின்போது யப்பானுக்கு எதிராக சீனமக்கள் போராடியபோது சோவியத் அரசாங்கமும் மக்களும் சீனுவின் பக்கம் நின்றன. ஆனல் அந்த விடயத்தை இன்றைய ஆப்கானிஸ்தான் நிலைமையுடன் ஒப்பிடுவது பொருத்தமல்ல. டாஸ் செய்தி ஸ்தாபனத்தை ஒன்று கேட்க விரும்புகிருேம். இன்று ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் எந்த 'ஆக்கிரமிப்பு' நாட்டுக்கு எதிராக போராடுகின்றனர் என்பதை கூறமுடியுமா?

(5-ம் பக்கம் பார்க்க)

# தோ. தொழிலாளருக்கு பிரஜாவுரிமை வழங்குவது வாக்குப் பிரச்சினை அல்ல மனிதப் பிரச்சினையே!

தோட்டத் தொழிலாளர்கள் 93,000 பேருக்கு பிரஜாவுரிமை வழங்கும் பிரச்சினை இப்பொழுதும் இழுபறி நிலையிலேயே இருந்து வருகிறது. இதுபற்றிய உறுதியான ஒரு நடவடிக்கையை இந்த அரசு இதுவரை எடுக்கவில்லை. கடந்த ஏழாண்டுகளாக பிரசாவுரிமை வழங்குவோம் என்ற வாக்குறுதியை மட்டும் வழங்கி வந்துள்ளது. அர்த்த மற்றதும், கேலிக்குரியதுமான சர்வகட்சி மாநாட்டிலும் இந்த பிரஜாவுரிமைப் பிரச்சினை முன்வைக்கப்பட்டு 93,000 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமை வழங்க ஏனையவர்களின் சம்மதமும் பெறப்பட்டது. இருந்தும் இன்றுவரை அதற்கான எதுவித நடைமுறையும் ஏற்படவில்லை.

அதேவேளை பௌத்தமத பீடமான மகா சங்கத்தினர் இப்பிரஜாவுரிமை வழங்கப் படுவதற்கு எதிராகக் கண்டனங்களைத் தொடுத்து வருகின்றனர். அவர்கள் பிரஜாவுரிமை பிரச்சினையை பச்சை இனவாதமாக்கி பிரசாரம் செய்து வருகின்றனர். இவர்களின் பிரசாரத்தைத் தமக்கு சாதகமாக்கி சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படுவதை எதிர்த்து வருகின்றனர்.

தொண்ணூற்றி மூவாயிரம் பேருக்கு பிரஜாவுரிமை வழங்கினால் அது சிங்கள மக்களின் பலத்தைக் குறைத்துவிடும் என்றும், இந்திய வம்சாவழி மக்களின் பலத்தைக் கூட்டும் என்றும், எதிர்காலத்தில் இது 'மலைநாடு' கோரிக்கையில் கொண்டு சென்றுவிடும் என்றும் விசித்திரமான விவாதங்களில் ஈடுபடுகிறார்கள்.

சிறுபான்மை இன மக்களின் ஒரு பிரிவினரான மலைய மக்களின் அடிப்படை உரிமையான பிரசாவுரிமை வழங்கப்படுவதற்கு இவ்வளவு ஆவேசம் காட்டும் மகா சங்கத்தினர், இது போன்ற கடந்த கால அர்த்தமற்ற ஆவேசங்களினால் தான் இந்த நாட்டிற்கு இன்றைய நிலை வந்தது என்பதை இன்றுதானும் உணர முடியாதவர்களான நிலையிலேயே உள்ளனர்.

பிரஜாவுரிமைப் பிரச்சினையை ஒரு இனவாதப் பிரச்சினையாகவும், அதன் மூலம் வாக்குகள் கூடுவது குறைவது என்ற அடிப்படையிலும் நோக்கக்கூடாது. அவ்வாறு கடந்த காலத்தில் வாக்குகளையும், பாராளுமன்றக் கதிரைகளையும் மையப்படுத்தி ஒவ்வொரு பிரச்சினையையும் அணுகியதாலேயே இனப் பிரச்சினை இன்றைய நிலையை அடைந்தது என்பதை இன்றைய சந்தர்ப்பத்தில் கூட சிலர் மறந்துவிடுகிறார்கள்.

இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிற்கு கொண்டுவரப் பட்டவர்கள் என்பது இரகசியமானதொன்றல்ல. ஆனால் அவர்கள் இங்கு வந்து நூற்றி ஐம்பது வருடங்களுக்குமேல் வாழ்ந்துவிட்டார்கள். அவர்கள் சும்மா இருந்து சுக போகம் பெறவில்லை. இந்நாட்டின் நாகரீகம், கலை, கலாச்சாரத்திற்கு ஊறு விளைவிக்கவில்லை. இந்நாட்டு மக்களுக்கு விரோதமாக செயல்பட்டதும் இல்லை. இந்நாட்டு மக்களின் சுகதுக்கங்களில் பங்கு கொண்டே வாழ்ந்து வந்துள்ளனர். மிக முக்கியமானது இந்நாட்டின் பொருளாதாரத்துக்கு தமது தொடர்ச்சியான வாழ்வையே அர்ப்பணித்து வந்துள்ளனர்.

இலங்கையிலேயே உள்ள தொழிலாளர்களில் ஆகக் குறைந்த கூலியே அவர்களுக்கு இன்றும் வழங்கப் படுகிறது. அடிப்படையான பல வாழ்வுக்குரிய வசதிகள், உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இருந்தும் இந்நாட்டுக்கு எதிராக, அல்லது மக்களுக்கு விரோதமாகச் செயல்பட்டது கிடையாது. காரணம் அவர்கள் இந்த 'நாட்டையே தமது சொந்த நாடு' என்றே நம்புகிறார்கள். இவ்வாறு இந்நாட்டின் தேசிய வாழ்வுடன் தம்மைப் பிணைத்துக் கொண்ட தோட்டத்தொழிலாளர்களுக்கு இதுவரை மறுக்கப்பட்டு வந்த அடிப்படை உரிமையான பிரஜாவுரிமையை மறுத்துப்பேசுவது நன்றிகெட்ட துரோகத்தனமாகும். அவர்களுக்கு எதிரான இனவாத விஷமத்தனங்களைப் பரப்புவது கண்டனத்துக்குரியதாகும். தமது குறுகிய வர்க்க நோக்கங்களுக்காக, சிங்கள மக்கள் மத்தியில் அதிக வாக்குகளைச் சேகரிப்பதற்காக தோட்டத் தொழிலாளர்களை வஞ்சித்து அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான உரிமை

(6-ம் பக்கம் பார்க்க)

## கம்பூச்சிய மக்களின்

...4ம் பக்கத்தொடர்

உள்ளது என்பது சொல்லாமலே விளங்கும். ஆறுவருடங்கள் சென்றபின்னரும் மிகவும் பயிற்றப்பட்ட நவீன ஆயுதங்களுடன் கூடிய சோவியத் பொருளாதார உதவிகளுடன் கூடிய இரண்டு இலட்சம் வியட்நாமிய படையால் சுமார் 60 ஆயிரம் பேரைக் கொண்ட விடுதலைப் படையை அழித்தொழிக்க முடியாதுள்ளது. இதுவரை எந்த ஒரு முக்கிய தலைவரையும் உயிருடன் பிடிக்கவோ, அல்லது கொல்லவோ முடியாது தவிக்கிறது. இதற்கான காரணம் என்ன?

ஆயுதங்கள் மட்டும் விடுதலையைப் பெற்றுத்தர முடியாது. சரியான கொள்கையை அவ்வப்போது வகுக்கக்கூடிய தலைமை இருக்க வேண்டும். கம்பூச்சியாவில் அமைந்திருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. தாய்லாந்து கம்பூச்சிய எல்லை கரடுமுரடான 440 மைல் நீளமான மலைப்பகுதிகள். வியட்நாம் கிழக்கே இருக்கிறது. அப்பகுதிகளிலேயே வியட்நாம் படைகள் அதிகம் நிலை கொண்டுள்ளன. தாய்லாந்து ஒரு கம்யூனிச விரோத நாடு மட்டுமல்ல. அந்நாட்டின் சில பகுதிகளை தாய்லாந்து கம்யூனிஸ்ட்டுக்கள் தமது தளப் பிரதேசங்களாகவும் வைத்திருக்கின்றனர். எவ்வாறாயினும் வியட்நாம் கம்பூச்சியாவில் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினால் அது தாய்லாந்தையும் ஆக்கிரமிக்கும் என்ற பயத்தின் காரணமாகவே கெமர் றூச் படைகளுக்கு தாய்லாந்து புகலிடம் கொடுப்பதன் ரகசியம் அடங்கியுள்ளது. லாவோஸ் ஏற்கனவே

தளங்களுக்குப் பின்னால் இயங்கிவருவதால் அவர்களுக்கு பெருத்த சேதம் விளைவிக்கக் கூடிய நிலையில் விடுதலைப் படையுள்ளது.

வியட்நாமின் தந்திரங்கள் யாவும் சர்வதேச அரங்கில் தமக்கு ஆதரவு திரட்டுவதற்காகவே இந்த மேற்குப் பகுதித் தாக்குதல் அமைத்திருக்கிறது. கம்பூச்சியாவில் எதிர்ப்பு இயக்கங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. ஆட்சி தனது கைப்பொம்மை அரசிடம் இருப்பதாக பறைசாற்றவே அது பெருமெடுப்பில் இந்த தாக்குதலை மேற்கொண்டது.

இப்போது தாய்லாந்திற்குள் இலட்சக்கணக்கில் அகதிகள் குவிந்துள்ளனர். சுமார் ஆயிரம் பேர் அடங்கிய விடுதலைப்படையினரும் தாய்

மிப்பாளர்களுக்கு கம்பூச்சியாவில் பலத்த அடிகள் கிடைத்துவருகின்றன. தமது பிராந்திய மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயன்றுள்ள வியட்நாம் கம்பூச்சியாவில் இரண்டு லட்சம் துருப்புக்களையும். லாவோசில் ஐம்பதினாயிரம் துருப்புக்களையும் வைத்திருக்கிறது. அன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வியட்நாம் மக்களின் நீதியான போராட்டம் வெற்றி பெற்றது. அதே போல் இன்று வியட்நாமிய ஆக்கிரமிப்பை எதிர்த்து கம்பூச்சிய மக்களின் நீதியான போராட்டம் வெற்றி பெற்றேதீரும். ★

## ஆக்கிரமிப்பை......

4ம் பக்கத்தொடர்

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ''பிரகடனப் படுத்தாத யுத்தம்'' ஒன்றில் சீனா ஈடுபட்டுள்ளதாக டாஸ் கூறு

மிகவும் ஆச்சரியத்துக்குரிய விடயம் ஐ. நா. சாசனத்தை டாஸ் துணைக்கு அழைத்துள்ளமைதான். 'ஆப்கான் மக்களுக்கு சோவியத் யூனியன் உதவிசெய்வது ஐ நா சாசனத்திற்கு முற்றிலும் இசைவானதே' என டாஸ் கூறுகிறது.

ஆனால் உண்மை என்ன? ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் ஊடுருவலுக்குப் பின் வருடா வருடம் ஐ நாவில் மாஸ்கோ கண்டனத்திற்குள்ளாகின்றது. ஐ நா பதிவுதரும் முடிவு சோவியத் யூனியனே உலகின் பெரும்பான்மை நாடுகளுக்கு விரோதமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்பதேயாகும். ★

## உழைக்கும் பெண்......

3ம் பக்கத்தொடர்

ஜீவிகளுடன் இணைந்த இயக்

வுரிமை வழங்க ஏனையவர்களின் சம்மதமும் பெறப்பட்டது. இருந்தும் இன்றுவரை அதற்கான எதுவித நடைமுறையும் ஏற்படவில்லை.

அதேவேளை பௌத்தமத பீடமான மகா சங்கத்தினர் இப்பிரஜாவுரிமை வழங்கப்படுவதற்கு எதிராகக் கண்ட

லத்தில் இது 'மலைநாடு' கோரிக்கையில் கொண்டு சென்றுவிடும் என்றும் விசித்திரமான விவாதங்களில் ஈடுபடுகிறார்கள்.

சிறுபான்மை இன மக்களின் ஒரு பிரிவினரான மலையமக்களின் அடிப்படை உரிமையான பிரசாவுரிமை வழங்கப்

வொரு பிரச்சினையையும் அணுகியதாலேயே இனப்பிரச்சினை இன்றைய நிலையை அடைந்தது என்பதை இன்றைய சந்தர்ப்பத்தில் கூட சிலர் மறந்துவிடுகிறார்கள்.

இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிற்கு கொண்டுவரப்

துள்ளனர்.

இலங்கையிலேயே உள்ள தொழிலாளர்களில் ஆகக் குறைந்த கூலியே அவர்களுக்கு இன்றும் வழங்கப்படுகிறது. அடிப்படையான பல வாழ்வுக்குரிய வசதிகள், உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இருந்தும் இந்நாட்டுக்கு

களுக்காக, சிங்கள மக்கள் மத்தியில் அதிக வாக்குகளைச் சேகரிப்பதற்காக தோட்டத் தொழிலாளர்களை வஞ்சித்து அவர்களுக்கு கிடைக்கவேண்டிய நியாயமான உரிமை

(6-ம் பக்கம் பார்க்க)

# கம்பூச்சிய மக்களின்...

4ம் பக்கத்தொடர்

உள்ளது என்பது சொல்லாமலே விளங்கும். ஆறுவருடங்கள் சென்றபின்னரும் மிகவும் பயிற்றப்பட்ட நவீன ஆயுதங்களுடன் கூடிய சோவியத் பொருளாதார உதவிகளுடன் கூடிய இரண்டு இலட்சம் வியட்நாமிய படையால் சுமார் 60 ஆயிரம் பேரைக் கொண்ட விடுதலைப் படையை அழித்தொழிக்க முடியாதுள்ளது. இதுவரை எந்த ஒரு முக்கிய தலைவரையும் உயிருடன் பிடிக்கவோ, அல்லது கொல்லவோ முடியாது தவிக்கிறது. இதற்கான காரணம் என்ன?

ஆயுதங்கள் மட்டும் விடுதலையைப் பெற்றுத்தர முடியாது. சரியான கொள்கையை அவ்வப்போது வகுக்கக்கூடிய தலைமை இருக்க வேண்டும். கம்பூச்சியாவில் கெமர் றூச்சிடம் அவ்வாறான தலைமை இருப்பதால்தான் மிகச்சொற்ப உயிர்ச் சேதத்துடன் அது நாடு பூராவும் பரந்து செயற்படுகிறது. சகல இனமக்களையும், சகல பிரிவு மக்களையும் வியட்நாமிய ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக அணிதிரட்டியுள்ளது. கம்யூனிஸ்ட்டுக்களான கெமர்றூச் கம்யூனிஸ்ட் விரோதிகளையும் தமது அணியில் சேர்த்துள்ளமை அவர்களின் தேசப்பற்றையும் அரசியல் சாணக்கியத்தையும் எடுத்துக் காட்டுகிறது. இன்று கம்பூச்சியாவிற்கு தேவைப்படுவது ஒரு சோஷலிஸ அரசாங்கமல்ல வியட்நாமின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்ட பரந்துபட்ட ஜனநாயக அரசே என்பதை கெமர்றூச் தலைவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அதனடிப்படையிலேயே வேறுபட்ட அரசியல் கொள்கையுடையவர்களையும் வியட்நாம் எதிர்ப்பு முன்னணியில் இணைத்துள்ளனர்.

கம்பூச்சிய விடுதலைப் படையினரின் செல்வாக்கு மேற்குப் பகுதியில் தாய்லாந்து எல்லை நெடுகிலும் அமைந்திருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. தாய்லாந்து கம்பூச்சிய எல்லை கரடுமுரடான 440 மைல் நீளமான மலைப்பகுதிகள். வியட்நாம் கிழக்கே இருக்கிறது. அப்பகுதிகளிலேயே வியட்நாம் படைகள் அதிகம் நிலைகொண்டுள்ளன. தாய்லாந்து ஒரு கம்யூனிச விரோத நாடு மட்டுமல்ல. அந்நாட்டின் சில பகுதிகளை தாய்லாந்து கம்யூனிஸ்ட்டுக்கள் தமது தளப் பிரதேசங்களாகவும் வைத்திருக்கின்றனர். எவ்வாறாயினும் வியட்நாம் கம்பூச்சியாவில் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினால் அது தாய்லாந்தையும் ஆக்கிரமிக்கும் என்ற பயத்தின் காரணமாகவே கெமர் றூச் படைகளுக்கு தாய்லாந்து புகலிடம் கொடுப்பதன் ரகசியம் அடங்கியுள்ளது. லாவோஸ் ஏற்கனவே வியட்நாமின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. சீனாவிற்கும் கம்பூச்சியாவிற்குமிடையே தாய்லாந்து, லாவோஸ், வியட்நாம் ஆகிய நாடுகள் இருப்பதனால் கம்பூச்சியாவிற்கான சீன இராணுவ உதவிகள் கடல் மார்க்கமாகக் கிடைக்கின்றது.

அண்மையில் வியட்நாம் கம்பூச்சியாவின் மேற்குப் பகுதியில் கைப்பற்றிய மேலாய் தளத்தை அதிககாலத்திற்கு தொடர்ந்து வைத்திருக்கமுடியாதென்பது இராணுவ அறிஞர்களின் கணிப்பு. 440 மைல் நீள தாய்லாந்து எல்லையில் படைகளை நிலைகொள்ளச் செய்வதற்கு வியட்நாமிற்கு பல இலட்சம் படைதேவை என்பது மட்டுமல்ல மழை காலம் தொடங்குவதற்கு முன்னர் இப்பகுதியை விட்டு வியட்நாம் படைகள் வெளியேற்றப் படுவார்கள்.

மேலும் தற்போது விடுதலைப் படைகள் நாடுபூராவும் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து வியட்நாம் படைத்தளங்களுக்குப் பின்னால் இயங்கிவருவதால் அவர்களுக்கு பெருத்த சேதம் விளைவிக்கக் கூடிய நிலையில் விடுதலைப் படையுள்ளது.

வியட்நாமின் தந்திரங்கள் யாவும் சர்வதேச அரங்கில் தமக்கு ஆதரவு திரட்டுவதற்காகவே இந்த மேற்குப் பகுதித் தாக்குதல் அமைத்திருக்கிறது. கம்பூச்சியாவில் எதிர்ப்பு இயக்கங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. ஆட்சி தனது கைப்பொம்மை அரசிடம் இருப்பதாக பறைசாற்றவே அது பெருமெடுப்பில் இந்த தாக்குதலை மேற்கொண்டது.

இப்போது தாய்லாந்திற்குள் இலட்சக்கணக்கில் அகதிகள் குவிந்துள்ளனர். சுமார் ஆயிரம் பேர் அடங்கிய விடுதலைப்படையினரும் தாய்லாந்தில் தற்காலிகமாக புகலிடம் பெற்றுள்ளனர். வியட்நாம் தற்போது தாய்லாந்திற்குள்ளும் ஊடுருவியுள்ளது மட்டுமல்லாமல் நச்சுக் குண்டுகளை ஏவுகணைகள் மூலமாக அகதிகள் வசிப்பிடங்கள் மீது செலுத்தியுமுள்ளது. சையனையிட் வாயுவை அவ்வாறு செலுத்தியதனால் பலர் மாண்டுவிட்டதாக விடுதலைப்படை வானொலி அறிவித்துள்ளது. வியட்நாம் படைகள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பத்து மைல் தூரம் வரை ஊடுருவியுள்ளதாக தாய்லாந்து அறிவித்துள்ளது. வியட்நாமியப் படைகள் தாய்லாந்துக்குள் முழு அளவில் பிரவேசித்தால் மட்டுமே சீனா இராணுவரீதியில் தலையிடக்கூடுமென சில அவதானிகள் கருதுகின்றனர். எது எவ்வாறாயினும் கம்பூச்சிய மக்கள் தமது விடுதலையைத் தமது சொந்தக் காலில் நின்று பெற்றுக்கொள்வார்கள் என்பதில் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு.

இன்று என்றுமில்லாதவாறு சோவியத் பின்னணியுடனான வியட்நாம் ஆக்கிரமிப்பாளர்களுக்கு கம்பூச்சியாவில் பலத்த அடிகள் கிடைத்துவருகின்றன. தமது பிராந்திய மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயன்றுள்ள வியட்நாம் கம்பூச்சியாவில் இரண்டு லட்சம் துருப்புக்களையும். லாவோசில் ஐம்பதினாயிரம் துருப்புக்களையும் வைத்திருக்கிறது. அன்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வியட்நாம் மக்களின் நீதியான போராட்டம் வெற்றி பெற்றது. அதேபோல் இன்று வியட்நாமிய ஆக்கிரமிப்பை எதிர்த்து கம்பூச்சிய மக்களின் நீதியான போராட்டம் வெற்றி பெற்றேதீரும். ★

## ஆக்கிரமிப்பை......

4ம் பக்கத்தொடர்

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ''பிரகடனப் படுத்தாத யுத்தம்'' ஒன்றில் சீனா ஈடுபட்டுள்ளதாக டாஸ் கூறுவது மிகவும் மோசமான பித்தலாட்டம். சீனா ஆப்கானிஸ்தானுக்குள் ஒரு படைவீரனைத்தன்னும் அனுப்பவில்லை யென்பது சகலருக்கும் தெரிந்ததே.

வாஷிங்டனுக்கும், பீக்கிங்குக்குமிடையே ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் ஒரு தொடர்பை கட்டுவதன் மூலம் அந்தநாட்டில் சோவியத் ஆக்கிரமிப்புக்கு நியாயம் கற்பிக்கலாமென டாஸ் முயற்சிக்கிறது. ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் சீனாவும் அமெரிக்காவும் ஒரே கருத்தைக் கொண்டுள்ளதால் சோவியத் ஆக்கிரமிப்பு நியாயமுடையதாகமாட்டாது என்பதை டாஸ் தெரிந்திருக்கவேண்டும். தனதுகறைபடிந்த கரங்களை மறைப்பதற்காக மற்றையோருக்கு சேறு வீசும் வேலையிலேயே டாஸ் ஈடுபட்டுள்ளது. இது சீனாவை எந்த விதத்திலும் பாதிக்காது. சீனா ஒரு சுதந்திரமான வெளிவிவகாரக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது.

மிகவும் ஆச்சரியத்துக்குரிய விடயம் ஐ. நா. சாசனத்தை டாஸ் துணைக்கு அழைத்துள்ளமைதான். 'ஆப்கான் மக்களுக்கு சோவியத் யூனியன் உதவிசெய்வது ஐ நா சாசனத்திற்கு முற்றிலும் இசைவானதே' என டாஸ் கூறுகிறது.

ஆனால் உண்மை என்ன? ஆப்கானிஸ்தானுக்குள் சோவியத் ஊடுருவலுக்குப்பின் வருடா வருடம் ஐ நாவில் மாஸ்கோ கண்டனத்திற்குள்ளாகின்றது. ஐ நா பதிவுதரும் முடிவு சோவியத் யூனியனே உலகின் பெரும்பான்மை நாடுகளுக்கு விரோதமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது என்பதேயாகும். ★

## உழைக்கும் பெண்......

3ம் பக்கத்தொடர்

ஜீவிகளுடன் இணைந்த இயக்கங்களிலும் போராட்டங்களிலும் கடந்தகாலத்தில் ஈடுபட்டு வந்துள்ளதைப்போல் எதிர்காலத்திலும் மேலும் பன்மடங்கு வேகத்துடன் ஈடுபடல் வேண்டும். பெண்களின் உரிமைக்குரல் சமுதாயத்தில் கிளப்பப்படும்போது அதற்குரிய வர்க்க சூழலும், சமுதாய மாற்றத்திற்கான நடைமுறைகளையும் சாராம்சமாகக் கொள்ளப்படல் வேண்டும். ஏனெனில் சமுதாய மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய சமூகப் புரட்சி ஒன்று அலசியம். அது தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான உழைக்கும் வர்க்கங்களின் ஒரு புரட்சியாகவே இருக்க முடியும். அத்தகைய புரட்சியின் வெற்றியும் அதன் மூலம் உருவாகும் புதிய சமுதாயமுமே பெண்களின் நீண்டகால அடிமைத்தனங்களை அறுத்தெறிந்து அவர்களின் சமுதாய அந்தஸ்தை நிலைநிறுத்த உதவக்கூடியதாகும். இதைவிட வேறு குறுக்கு வழி உழைக்கும் பெண்களின் விமோசனத்திற்கு இருக்க மாட்டாது. ★

செய்திப் பத்திரிகையாகப் பதிவு பெற்றது. செம்பதாகை Registered as a Newspaper in Sri Lanka

# கொள்ளைகளைத் தடுத்து நிறுத்த மக்கள் முன்வர வேண்டும்!

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) அறிக்கை

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற கொள்ளை மதத்தில் நம்பிக்கை கொண்டவர்களை மட்டுமன்றி அதில் நம்பிக்கை அற்றவர்களையும் அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. இது போன்ற அநாகரீகச் செயல்கள் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது மட்டுமன்றி இதில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்து மக்கள் முன் நிறுத்த வேண்டியது மக்கள் நலன் விரும்பும் ஒவ்வொருவரின் கடமையாகும்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) பொதுச் செயலாளர் தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவ்வறிக்கையில் மக்களின் மத நம்பிக்கையைக் கேலிசெய்யும் விதமாக நடந்து கொள்ளவோ, அன்றி ஆலயத்தில் கொள்ளை நடத்தி அதன் பரிபாலனத்தை சீர்குலைக்கவோ எவருக்கும் உரிமை கிடையாது. அவ்வாறு நடந்து கொள்பவர்கள் மக்களின் அன்றாட நலன்களுடன்மோதுபவர்களாகவே இருப்பர். அறுபதுகளின் பிற்பகுதியில் பிரசித்தி பெற்ற சைவ ஆலயங்களில் சமத்துவம் கோரி நடைபெற்ற ஆலயப் பிரவேசப் போராட்டங்களின்போது ஆலயங்களுக்கு எதிரான அல்லது மத நம்பிக்கை கொண்டவர்களுக்கு விரோதமான எந்த வித நடவடிக்கையையும் மேற்கொள்ளாது மிகவும் கட்டுப்பாடாகவும் நிதானமாகவும் எமது கட்சி உரிமைப் போராட்டம் நடத்தியதை இவ்வேளை ஞாபகப் படுத்த விரும்புகின்றோம.

எனவே இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்போல் நடித்து துர்க்கை அம்மன் ஆலயத்தில் கொள்ளை நடத்திய கூட்டத்தினரை அவர்கள் யாராக இருப்பினும் மக்கள் முன் நிறுத்தவேண்டியது மக்கள் நலன் விரும்பும் ஒவ்வொருவரின் கடமையாகும். அதேபோல் மக்களினதும் தொழிலாளர்கள்— ஊழியர்களினதும், அன்றாட வாழ்வைப் பாதிக்கும் படியான பொது தனியார் நிறுவனங்களில் தொடர்ந்து கொண்டு போகும் கொள்ளைகளைத் தடுத்து நிறுத்தி மக்களின் உயிர் உடமைகளை கொள்ளைக் கூட்டத்தினரிடமிருந்து பாதுகாப்பதற்கு சகல மக்களும் ஒன்றிணைந்து முன்வரல் வேண்டும்.

❀

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் இனவாதத்தை கிளறிவிடும்!

அமைச்சர் தொண்டமானுக்கு எதிராகப் பாராளுமன்றத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவர திரு. தினேஷ் குணவர்த்தன முன்வந்துள்ளார். இத்தீர்மானத்தை ஆதரிக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது. இவர்களுக்கு ஏன்தான் இந்த வேலையோ தெரியவில்லை. முதலாளித்துவப் பாராளுமன்ற அரசியலில் வசதியான தடி இனவாதம் தான் என்பதை இவர்கள் இதன் மூலம் மீண்டும் மெய்ப்பிக்கிறார்கள் போலும்.

அரசுக்கு முரணான சில நிலைப்பாடுகளையும், பேச்சுக்களையும் அமைச்சர் தொண்டமான் கொண்டிருந்த பின்பும் அரசு அவரைப் பூரணமாக நம்பும் போது எதிர்க்கட்சியினருக்கு காழ்ப்புணர்ச்சி வருவதற்கு நியாயம் இல்லை. முழு யூ. என். பி அரசுக்கும் எதிரான ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நாட்டு மக்களுக்கு அதன் உண்மை நிலையை விளங்கப் படுத்த முன்வந்திருந்தால் அது பயன் உள்ளதாகும். அதைவிடுத்து திரு. தொண்டமானுக்கு எதிராகப் பேச முற்படுவது இன்றைய வேளையில் மீண்டும் இனவாதத்தைக் கிளப்பவே உதவக் கூடியது. பாசிச வழியிலும், பேரினவாதப் போக்கிலும் சென்று கொண்டிருக்கும் யூ. என். பி ஆட்சியின் தேச அழிவுக்கான வேலையைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்தைவிட இவ்வேளை இனவாதத்தைக் கிளப்பி அதில் குளிர்காயவே எதிர்க்கட்சியில் உள்ள சிலர் முனைகிறார்கள். அதன் வெளிப்பாடே தொண்டமானுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானம்.

## மதிகெட்ட

1ம் பக்கத்தொடர்......

தற்கும் ஆலோசிக்கப்படுகின்றது.

இத்தகைய ஆலோசனையின் உள் நோக்கம் இன ஐக்கியமோ அன்றி நாட்டு அபிவிருத்தியோ அல்ல. முற்றிலும் இன அழிப்பிற்கானதாகும். தமிழ் மக்களின் பலத்தை சிதறடிக்கச் செய்து ஒவ்வொரு மூலை முடுக்குகளில் காலமெல்லாம் அஞ்சி ஒடுங்கி வாழச் செய்யும் முயற்சியாகும் மேலும் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என்று கூறப்படுவதற்கு முற்றுப் புள்ளி வைக்கும் சதி நோக்கங்களையும் இவ் ஆலோசனைகள் உள்ளடங்கியுள்ளன. திருகோணமலை ஒருபுறத்தால் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளின் கைகளுக்கு சென்று கொண்டிருக்கின்றது. ஏற்கனவே எண்ணைக் குதங்கள் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. தற்போது சர்வதேச விமான நிலையம் ஒன்று கட்டுவதற்கான பொறுப்பும் அமெரிக்காவிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சுதந்திர வர்த்தகவலயம் உருவாக்கும் திட்டமும் அரசிடம் உள்ளது. மறுபுறத்தில்

ஆலோசனைகள் மேற்படி புதிய திட்டங்களில் அடங்கியுள்ளன.

அரசின் இத்திட்டங்களை தமிழ்மக்கள் தமது முழு வல்லமையையும் கொண்டு எதிர்க்க வேண்டும். அரசிற்கு இன்றைய வேளையிலும் ஆதரவு கொடுத்துவரும் உயர்வர்க்கத் தமிழர்கள் எனப்படும் கனவான்கள் கூட இதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. கூனிக்குறுகி அடிமைத் தனமாக எப்படியும் வாழ்ந்துவிட்டுப் போக விரும்பும் அடிமைப்புத்தி கொண்ட உயர்வர்க்கத் தமிழர்களைத் தவிர வேறு தன்மானம் உள்ள எந்தப் பிரஜையும் அரசின் நயவஞ்சகத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதேபோல் இந்நாட்டில் பல நூறு வருடங்களாக ஐக்கியத்துடனும், சகோதரர்களாகவும் தமிழ் மக்களுடன் வாழ்ந்து வந்த சிங்களமக்கள் அரசின் கபடத்தனத்தை புரிந்து கொள்வார்கள். ஒருபக்கத்தால் தமிழ் மக்களை எதிரிகளாகவும் அவர்களை அழித்து ஒழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டும் யூ. என். பி மறு பக்கத்தால் முழு

## சர்வதேச மகளிர்

1ம் பக்கத் தொடர் ....

கடைசி நேரத்தில் ஊர்வலத்திற்கான அனுமதி மறுக்கப்பட்டது. ஊர்வல இடத்திலிருந்து கூட்ட இடத்திற்குப் பெண்கள் சென்றபோதே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இவ்வாறுதான் இந்த அரசாங்கம் பெண்களின் உரிமைகள் விவகாரத்தில் நடந்துகொள்கிறது. பெண்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை அப்பட்டமாகவே மீறிய சந்தர்ப்பங்கள் இந்த அரசின் கீழ் ஏற்கனவே

ரத்துச்செய். ★ தேசியப் பிரச்சினையின் திரை மறைவில் எமது கணவன்மார், தந்தையர்கள், சகோதரர்கள், ஆகியோர் உயிர்த்தியாகங்களுக்கு உள்ளாவதை தடுத்து நிறுத்து ★ பல்கலைக் கழகங்களுக்கான புதிய சட்டத்தை கிழித்தெறி. ★ சீதன முறையை ஒழித்துக்கட்டு. ★ பிரசவ கால் மூன்றுமாத லீவை வழங்கத் தீர்மானித்த சட்டத்தை அமுல் செய்.

மேற்படி கோரிக்கைகளின் நியாயத்தைப் பொறுக்கமாட்டாத அரசு பெண்களுக்கு எதிரான பலாத்

அகதிகள் இங்கிருந்து சென்றுள்ளார்கள், அவர்களுக்கு அவ்வாறு செல்ல நிர்ப்பந்தம் இருந்தது. அவர்கள் அங்கு படும் கஷ்டங்கள் சொல்லும் தரமன்று! ஆனால் கூட்டணித் தலைவர்கள் அவ்வாறில்லை. அவர்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைக் காட்டி அங்கு தமக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் வாழ்ந்து வருகிறார்கள். இத்தகையவர்களையும் அவர்களது அரசியல் கொள்கைகளையும் தமிழ் மக்கள் இன்றைய நெருக்கடிகளின் மத்தியிலும் சரியாகவே எடைபோட்டு வருகிறார்கள்.

★

புள்ளி வைக்கும் சதி நோக்கங்களையும் இவ் ஆலோசனைகள் உள்ளடங்கியுள்ளன. திருகோணமலை ஒருபுறத்தால் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளின் கைகளுக்கு சென்றுகொண்டிருக்கின்றது. ஏற்கனவே எண்ணைக் குதங்கள் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன. தற்போது சர்வதேச விமான நிலையம் ஒன்று கட்டுவதற்கான பொறுப்பும் அமெரிக்காவிடம் ஒப்படைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சுதந்திர வர்த்தகவலயம் உருவாக்கும் திட்டமும் அரசிடம் உள்ளது. மறுபுறத்தில் திருகோணமலையை முற்றுமுழுதான சிங்கள மாவட்டமாக மாற்றவே மேற்கூறிய புதிய ஆலோசனைகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

இலங்கையில் தமிழர்கள் ஆங்காங்கே சிறு சிறு பகுதிகளில் அற்ப சொற்பமாக இருக்கிறார்களே தவிர அவர்கள் ஒரு இனமாகவோ அன்றி பாரம்பரியமான பிரதேசங்களிலோ வாழவில்லை என்ற நிலையை எதிர்காலத்தில் உருவாக்கவே இச் சதி ஆலோசனைகள் தீட்டப்பட்டுள்ளன. இது பல் இன—மத மக்களைக் கொண்டநாடு என்ற நிலையை மாற்றி ஒரு இன ஒருமத மக்களைக்கொண்ட நாடாக மாற்ற முற்படும் நீண்டகால நோக்கத்தை கொண்ட

வாழ்ந்துவிட்டுப் போக விரும்பும் அடிமைப்புத்தி கொண்ட உயர்வர்க்கத் தமிழர்களைத் தவிர வேறு தன்மானம் உள்ள எந்தப் பிரஜையும் அரசின் நயவஞ்சகத் திட்டங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதேபோல் இந்நாட்டில் பல நூறு வருடங்களாக ஐக்கியத்துடனும், சகோதரர்களாகவும் தமிழ் மக்களுடன் வாழ்ந்து வந்த சிங்களமக்கள் அரசின் கபடத்தனத்தை புரிந்து கொள்வார்கள். ஒருபக்கத்தால் தமிழ் மக்களை எதிரிகளாகவும் அவர்களை அழித்து ஒழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டும் யூ. என். பி மறு பக்கத்தால் முழு நாட்டையும் அமெரிக்காவின் தலைமையிலான அந்நிய ஏகாதிபத்திய வாதிகளிடம் தாரைவார்த்துக் கொடுத்து வருவதைச் சிங்கள மக்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளும் காலம் வந்துள்ளது. எனவே தமிழ் இனத்தை சிதைத்து சின்னாபின்னப் படுத்தி அழிக்க எடுக்கும் திட்டங்களை சிங்கள முற்போக்கு சக்திகளும், தேசபக்த, ஜனநாயக சக்திகளும் முழுப்பலம்கொண்டு எதிர்க்க வேண்டும். அத்தகைய எதிர்ப்பினாலேயே அரசின் தமிழ் மக்களுச்கு எதிரான சதியாலோசனைத்திட்டங்களை முறியடிக்கமுடியும். ★

மெய்ப்பிக்கிறார்கள் போலும்.

மானுக்கு எதிராகப் பேச

தீர்மானம்.

## சர்வதேச மகளிர்

1ம் பக்கத் தொடர் ....

கடைசி நேரத்தில் ஊர்வலத்திற்கான அனுமதி மறுக்கப்பட்டது. ஊர்வல இடத்திலிருந்து கூட்ட இடத்திற்குப் பெண்கள் சென்றபோதே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இவ்வாறுதான் இந்த அரசாங்கம் பெண்களின் உரிமைகள் விவகாரத்தில் நடந்துகொள்கிறது. பெண்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை அப்பட்டமாகவே மீறிய சந்தர்ப்பங்கள் இந்த அரசின் கீழ் ஏற்கனவே பல தடவைகள் நடந்துள்ளன. இப்பொழுது நேரடித் தாக்குதலாகவும், கைது செய்தலாகவும் உயர்ந்துள்ளது.

இத்தனைக்கும் மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தில் பெண்கள் சார்பாக முன்வைத்த கோரிக்கைகள் தான் என்ன? அவற்றைப் பார்த்தால் பெண்களின் நியாயமான ஜனநாயகக் கோரிக்கைளின் தன்மையைப் புரிந்துகொள்ளலாம். அவை யாவன: ★ வாழ்க்கைச் செலவைக் குறை ★ வடக்கு தெற்கு பகுதிகளின் அன்னையர்கள் ஒன்றிணைவோம். ★ பெண்கள் இரவு நேரங்களில் வேலைசெய்வதை ஏற்றுக்கொள்ளும் சட்டத்தை ரத்துச்செய். ★ தேசியப் பிரச்சினையின் திரை மறைவில் எமது கணவன்மார், தந்தையர்கள், சகோதரர்கள், ஆகியோர் உயிர்த்தியாகங்களுக்கு உள்ளாவதை தடுத்து நிறுத்து ★ பல்கலைக் கழகங்களுக்கான புதிய சட்டத்தை கிழித்தெறி. ★ சீதன முறையை ஒழித்துக்கட்டு. ★ பிரசவகால் மூன்றுமாத லீவை வழங்கத் தீர்மானித்த சட்டத்தை அமுல் செய்.

மேற்படி கோரிக்கைகளின் நியாயத்தைப் பொறுக்கமாட்டாத அரசு பெண்களுக்கு எதிரான பலாத்காரத்தைக் கட்டவிழ்த்துவிட்டது என்றே கூறவேண்டும். தார்மீகம் பேசும் அரசு இலங்கையில் தாய்க்குலத்திற்கு கொடுத்துள்ள மதிப்பின் அளவை சர்வதேச மகளிர் தினத்தில் பொலீஸ் நடத்திய பலாத்காரத் தர்பாரில் இருந்து கணக்கிட்டுக் கொள்ளமுடியும். ★

## கூட்டணித் தலைவர்கள்

2ம் பக்கத் தொடர்...

ஏற்படலாம். அது தேவையின் பொருட்டாகும். ஆனால் இன்று கூடடணியினர் தமிழ் நாட்டில் கூடாரம் அடித்திருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இன்று இந்தியாவுக்கு ஆயிரக்கணக்கான அகதிகள் இங்கிருந்து சென்றுள்ளார்கள், அவர்களுக்கு அவ்வாறு செல்ல நிர்ப்பந்தம் இருந்தது. அவர்கள் அங்கு படும் கஷ்டங்கள் சொல்லும் தரமன்று! ஆனால் கூட்டணித் தலைவர்கள் அவ்வாறில்லை. அவர்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைக் காட்டி அங்கு தமக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் வாழ்ந்து வருகிறார்கள். இத்தகையவர்களையும் அவர்களது அரசியல் கொள்கைகளையும் தமிழ் மக்கள் இன்றைய நெருக்கடிகளின் மத்தியிலும் சரியாகவே எடைபோட்டு வருகிறார்கள். ★

## தோட்டத் தொழிலாளர்

5ம் பக்கத் தொடர்......

யான பிரசாவுரிமையை கொடுக்கக்கூடாது எனப் பிரசாரம் சேய்வது மிக மிகப் பிற்போக்கானதாகும்.

அரசியல் ரீதியில், கொள்கை ரீதியில் தொண்டமானை எதிர்ப்பது வேறு விடயம். அவரது யூ. என். பி ஆதரவு நிலையைக் கண்டிப்பது விமர்சனம் செய்வது முற்றிலும் நியாயமானது. ஆனால் இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான முறையில் வழங்கப்படும் உரிமைகளை வழங்கக் கூடாது என வற்புறுத்துவது கேவலமான இனவாதமாகும்.

## சம்பள உயர்வு

1ம் பக்கத்தொடர்......

சாரம் செய்பவர்கள் கடந்த ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், மாவட்ட அமைச்சர்கள், சபாநாயகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகிய சகல தரத்தினருக்கும் பல மடங்கு சம்பளங்களை உயர்த்திய நடவடிக்கையை மக்கள் மறந்துவிடவில்லை. ஆளும் வர்க்கம் தமது சுகபோகத்திற்கு சம்பளத்தை உயர்த்தும் அதே வேளை தொழிலாளிவர்க்கத்திற்கும். உழைக்கும் புத்திஜிவிகளுக்கும் சம்பள உயர்வை மறுத்து அடக்குமுறைமூலம் அவர்களது கோரிக்கைகளை நசுக்கி வருகிறது. இதில் இருந்து தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் யூ. என். பியைப் பற்றிய படிப்பினையை பெறுவது மட்டுமல்ல அப் பொது எதிரியை முறியடிக்க முன்வருவதும் அவசியமாகும்.

★

## ஜனநாயக ஆட்சி?

அவசரகாலச் சட்டத்தின் மூலம் ஆளப்பட்டு, ஆயுதப்படைகளின் வரைமுறையற்ற அட்டகாசங்களினால் கொல்லப்பட்டு, பல்கலைக்கழகச் சட்டத்தை எதிர்த்த மாணவர்கள் ஆசிரியர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, சம்பள உயர்வுகேட்ட வங்கி ஊழியர்கள் வர்த்தமானி அறிவித்தலால் நசுக்கப்பட்டு, தாதிமார்கள் சம்பள உயர்வு கேட்டால் வீட்டுக்கு அனுப்பப்படுவர் எனப் பயமுறுத்தப்பட்டு, அரசுக்கு எதிரான கருத்துடையோர் அல்லது தமது உரிமைகளுக்கு குரல் எழுப்புவோர் பயங்கரவாதிகளுக்கு உதவி செய்பவர்கள் எனப் பட்டம் சூட்டப்பட்டு வரும் இன்றைய ஆட்சிதான் தன்னை ஒரு ஜனநாயகம் ஆட்சி என்று கூறிக்கொள்கின்றது. இது ஒரு ஜனநாயக ஆட்சியா? அன்றி ஒரு பாசிச ஆட்சியா? மக்களே தீர்மானிக்கவேண்டும்.

அச்சுப்பதிவு: யாழ்ப்பாண அச்சகம் 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு: சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.